1010

தொகுதி 11.] 1932ஹு அக்டோபர்மீ [பகுதி 9.

DEC

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்

இரத்தினபுரி இரகசியம்

(7-ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

9 DEC 1932

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள்

எழுதியது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186573
சென்னை 600 008

"ஆனந்த போதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1932

காபிரைட் ரிஜிஸ்தர்] [விலை ரூபா 2-4-0.

186573.

உடனே ஹேமவதி சிமாட்டி, 'மெதுவாகப் பேசு. இவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள வேண்டாம். இனி நான் என்ன செய்ய முடியும்? அவ் விஷயம் போலீசாரிடம் போய் விட்டதே' என்று மெதுவாகவும் அடக்கத்துடனும் கெஞ்சும் தோரணையிலும் பேசினாள். கர்வத்தில் பேர்போன தனது தாயார் அவ்வளவு அடக்கத்துடன் பேசுவதைக் கண்ட ராஜேஸ்வரி அதிக ஆச்சர்யமடைந்தாள். அப்போது அங்கு வந்திருந்த அம்மாது, 'நீ போலீசாரிடம் கூறிய சரியான அங்க அடையாளங்களிலிருந்து அவர்கள் உண்மையான ஆளைத் தெரிந்து கொண்டு விட்டார்கள். அக் கொள்ளைக் கூட்டத் தலைவனை ராட்சஸ குப்பன் எனக்கு மிகவும் வேண்டியவன். அவனால் எனக்கு எவ்வளவோ காரியங்கள் முடிகின்றன. அவனை நான் இழக்க முடியாது' என்று வற்புறுத்திக் கூறினாள்.

அப்போது ஹேமவதி சிமாட்டி, 'என தன்புள்ள மாதே! நீயே நன்றாக யோசித்துப் பார். இப்போது இதை விசாரித்துக் கொண்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் எனக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பாதகமில்லை. நீங்கள் இதை விசாரிக்க வேண்டியதில்லை என்று சொன்னால் என் நிலைமை எவ்வளவு கேவலமாய்விடும் என்பதை நீ யோசித்துப் பார்க்க வேண்டும்! ஆகவே அதைவிட்டு வேறு ஏதேனும் கேள். உனக்குப் பணம் எவ்வளவு வேண்டுமாயினும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்' என்று தெரிவித்துக் கொண்டாள். அப்போதும் அம்மாது பிடிவாதமாக, 'அதெல்லாம் முடியாது. எப்படியாவது குப்பனைக் காப்பாற்றத்தான் வேண்டும். என்னை அடக்கப் பார்க்கவேண்டாம். என் இஷ்டப்படி நடக்காவிட்டால்—' என்று சொன்னாள். அச்சமயம் அவ்வழியே யாரோ வரும் சத்தம் கேட்டதால் ராஜேஸ்வரி அங்கிருந்து

அப்புறம் செல்ல வேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட ருசிகரமான ஒரு சம்பாஷணை நடந்து கொண்டிருந்தபோது அங்கிருந்து செல்ல அவளுக்கு மனமில்லை யென்றாலும் வேறு வழியில்லை. ஆகவே அவள் மீண்டும் சமையல் வீட்டுக்குச் சென்று தன் தங்கையினிடம்தான் கேட்டதை யெல்லாம் சொல்லி விட்டாள். தன் தாயாரையும் மிரட்டும் ஒரு மாது வந்திருக்கிறாள் என்பதை அறிந்த மாத்திரத்தில் கற்பகம் அதிக ஆச்சர்ய மடைந்தாள். ராஜேஸ்வரியின் காதில் விழுந்த சங்கதியிலிருந்து, தங்கள் தாயாரைக்காண வந்த மாது, அம் மாளிகையில் கொள்ளையடித்த கூட்டத்தார் மீது வழக்குத் தொடரப் படுவதை நிறுத்தவே வந்திருக்கிறாள் என்பதை உணர்ந்தார்கள். ஆகவே அம்மாதும் கொள்ளைக்காரர்களுடன் ஏதோ சம்பந்தம் வைத்திருக்கவேண்டும் என்று அவர்கள் புத்திக்குப் பட்டது. அப்படி கொள்ளைக்காரர்களுடன் சம்பந்தம் வைத்திருக்கும் ஒரு மாது தங்கள் தாயாரின் மீது அதிகாரம் பெற்றதெப்படி' அதற்கு என்ன காரணம்? என்று யோசிக்கலானார்கள். ஆனால் ஒன்றும் விளங்கவில்லை.

எனினும் ராஜேஸ்வரி தன் தங்கையினிடம் 'தங்காய்! இப்போது என் காதில் விழுந்த விஷயம் நடந்திருக்க வேண்டாமென்றே நான் விரும்புகிறேன். இதைக் கவனிக்கும்போது பகலில் நாம், நமது தாயார் செல்வநாதருடன் பேசிக்கொண்டிருக்கும்போது கேட்டதோ அல்லது நமது தாயார் மோகனதாஸினிடம் காதல் கொண்டிருப்பாளென்று சந்தேகப் பட்டதோ சிறு விஷயமாகும். இப்போது வந்த மாது திருடர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதுடன் அவள் பேசும் தோரணையிலிருந்து அவளும் திருடியாகவே இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அப்படிப் பட்ட கேவல நிலைமையிலுள்ள ஒருத்தி, செல்வம், அழகு,

அந்தஸ்து ஆகிய எல்லாம் படைத்த நமது தாயாரை மிரட்டுவதென்றால் நமது தாயார் ஏதோ பரம ரகசிய விஷயத்தில் அவளிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது' என்றாள். அதற்குக் கற்பகம், 'அக்கா! நீ தயவுசெய்து அந்தப் பரமரகசியத்தைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப் படவேண்டாம். இப்போது நீ என் வார்த்தையை மீறி அங்குச் சென்றதால்தானே இந்தச் சொற்ப விஷயத்தையாவது காதில் கேட்க நேரிட்டது. எனக்கு இதெல்லாம் கேட்கவும் பயமாயிருக்கிறது' என்று உண்மையிலேயே அச்சத்துடன் கூறினாள். அப்போது ராஜேஸ்வரி, 'தங்காய்! இவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே. நான் எப்படியாவது இந்த இரகசியத்தைக் கண்டுபிடிப்பதென்றுதான் நிச்சயித்திருக்கிறேன். அதைத் தெரிந்து கொள்வதால் நமக்கு எவ்வளவோ நன்மை உண்டாக்கலாம்' என்று கூறியதும் கற்பகம் ஆச்சர்யத்துடன் 'ஐயோ கடவுளே! நமக்கு எந்த வகையில் அது பிரயோசனப்படும் என்று நீ நினைக்கிறாய்? என்று கேட்டாள். அதற்கு அவள், நான் சொல்வதன் அர்த்தம் உனக்கு விளங்க வில்லையா? நம்மிடமும் இரகசியம் இருக்கிற தல்லவா? நமது தாயாரின் இரகசியத்தை நாம் அறிந்துகொண்டு விட்டோமானால் அவள் நமது இரகசியத்தை அறிந்தாலும் நம்மைக்கண்டிக்க முடியாமற் போகும்! என்று கூறினாள். இதைக்கேட்டதும் கற்பகம் சிறிது கவலையும் வெறுப்பும் அடைந்தாள். ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குப் பின்னர், 'அக்கா! இப்போதும் நீ சொன்ன கடைசி வார்த்தைகள் எனக்கு விளங்கவில்லை. உன் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெளிவாகச் சொல்' என்று கேட்டாள்.

அப்போது ராஜேஸ்வரி, 'என தன்புள்ள சகோதரியே!

நாம் இருவரும் காதலில் உழன்று இருக்கிறோம். மேலும் நாமும் விசித்திரமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீ உன் மனமார்ந்த காதலனான துளசிங்கம் பிரபுவைக் கலியாணம் செய்து கொண்டால், அவருக்கு முதல் மனைவி இருப்பதால் உன் கலியாணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அது போலவே நான் எனது காதலனான மோகன சுந்தரத்தைக் கலியாணம் செய்து கொண்டால் உலகம் சிரிக்கும். இந்த நிலைமையில் நாம் அவர்களைப் பகிரங்கமாகக் கலியாணம் செய்து கொள்ளாமல் இருப்பதே நலம்' என்று கூறியதும் கற்பகம் ஆத்திரத்துடன், 'அப்படியானால் நம்முடைய காதலை நாம் மறந்துவிட முடியுமா? உன் சங்கதி எனக்குத் தெரியாது. என்வரையில் சொல்ல வேண்டுமாயின் என் காதலனை நான் என் உயிர் போவதாயிருந்தாலும் மறக்க முடியாது என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினள்.

அப்போது ராஜேஸ்வரி, 'தங்காய்! நான் மட்டும் காதலில் இளைத்தவள் என்று நினைக்கிறாயா? எனது காதலனான மோகனத்தை நானாக மறக்க விரும்பினாலும் என் மனம் மறக்காது. ஆயினும் நாம் இருவருமே அவர்களை மணந்து கொள்ளக்கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம். நமது சம்பந்தத்தை இரகசியமாக வைத்துக் கொண்டிருக்கலாம்' என்று தெரிவித்தாள். அதற்கு கற்பகம், 'அக்கா! நீ கூறுவதன் விவரம் எனக்கு விளங்கவில்லையே. அதை நன்றாக விளக்கிச்சொல்' என்றதும் ராஜேஸ்வரி, அசட்டுச் சிரிப்புடன் 'நாம் இவ்விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளலாமென்பதில் நமது தாயாரே வழி காட்டியிருக்கிறாள் அல்லவா? செல்வநாதரும் முன்னரே நாமும் தாயின் வழியையே பின்பற்ற நேரிடும் என்று ஜோசியங் கூறியிருக்கிறாரல்லவா? ஆகவே

நாமும் அவ்வழியைப் பின் பற்றி நமது காதலர்களுடன் இரகசிய சம்பந்தம் வைத்துக்கொள்வதே நலம்' என்று விவரித்துக் கூறினாள். கற்பகம் இயற்கையிலேயே சிறிது பரிசுத்த குணமுடையவளாதலால் தன் தமக்கை சொன்ன இந்தத் தீய வழியைக் கண்டு மிகவும் மனம் வருந்தினாள். பிறகு ராஜேஸ்வரியிடம், 'எனதன்புள்ள அக்கா! அப்படிப்பட்ட அசுத்தமான எண்ணம் உன் மனதில் தோன்றுவதை நீ மறந்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்' என்றாள்

அதற்கு ராஜேஸ்வரி 'தங்காய்! அது கிடக்கட்டும். இன்று காலை செல்வநாதர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்ததிலிருந்து நமது தாயார் விஷயத்தில் உனக்கே ஒரு விதமான சந்தேகம் ஏற்பட்டதல்லவா?' என்று வினவினாள் அதற்கு இளையவள், 'ஆம்; ஒருவிதமான சந்தேகம் தோன்றியிருக்கிறதென்றாலும் உண்மை வெளியான பிறகு தானே எதையும் நிச்சயமாகக் கூறலாம்,' என்றாள். அப்போது ராஜேஸ்வரி, சரி, இனி நாம் அதைப் பற்றிப் பேசவேண்டாம். நாளை காலைக்குள் உனக்கே புத்தி மாறப்போவது நிச்சயம். நானும் முதலில் சந்தேகமுடையவளாகத்தான் இருந்தேன். இப்போது எனக்கு அவ்விஷயத்தில் சிறிதும் சந்தேகமே யில்லை!' என்று கூறி முடித்தாள். பிறகு சற்று நேரம் இரு சகோதரிகளும் பேசாமல் இருந்து ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் ஏதோ சிந்தனையில் மூழ்கினர். அச்சமயம் அவர்களுடைய தாயாரான ஹேமவதி சீமாட்டியும் அங்கே வந்து சேர்ந்தாள் அவளது குமாரிகளிருவரும் அவளைப் பரிவுடன் நோக்கினர். ஆயினும் அவளிடம் ஏதோ சந்தேக முடையவர் போல் காண்பித்துக் கொள்ளவில்லை. ஆகவே சீமாட்டியும் அந்தரங்கத்தில், குமாரிகள்

தன்னைப்பற்றி என்ன தெரிந்துகொண்டு விட்டார்களோ என்னும் அச்சமுடையவளாயினும் தைரியமுள்ளவள்போல் சிரிப்புடன் பேச ஆரம்பித்தாள். தாயும் குமாரிகளும் பொதுவான பல விஷயங்களைப் பற்றிப் பேசலாயினர். 'தாயைப் போலப் பிள்ளை' என்னும் பழமொழியொன்று தமிழ் நாட்டில் உண்டு. மக்களும் தாயின் குணத்தையொத்தவர்களாகவே இருப்பர் என்பது அனுபவத்திற் கண்ட உண்மை. இதனால்தான் பெண்களும் கல்வி கற்று ஒழுக்கமும் வீரமும் உடையவர்களா யிருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் மக்களும் அவ்வாறே சிறப்புடன் வாழ்வார்கள் என்பதற்காகவே பெண் கல்வி அவசியம் என்று வற்புறுத்தப்படுகின்றது. மக்களைச் சரியான துறையில் பயிற்றுவிக்க வேண்டிய தாய்மார்கள் பரிசுத்தமான குணம், நடத்தை, எண்ணம் முதலியவைகளை யுடையவர்களாக இருத்தல்வேண்டும். ஹேமவதி சீமாட்டியைப் போல் தவறான வழியில் செல்வார்களானல் அவர்களுடைய மக்களும் அதையே பின்பற்ற நேரிடும். ஆதலின் இதை வாசிக்க நேரும் பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை யுணர்ந்து நடந்துகொண்டு பிற்கால சந்ததியார் ஒழுங்கான முறையில் வாழ்க்கையை நடத்தக் கூடிய வழிகாட்டிகளாக இருப்பார்களென்று நம்புகிறோம்.

——:o:——

35-வது அத்தியாயம்

எதிர்பாராத ஆபத்து.

இப்போது நாம் நாடகக் கொட்டகைக்குப் போய்த் தனக்கு உதவி செய்த பிரபல நடிகையாகிய ராஜலட்சுமிக்கு வந்தனம் செலுத்திவிட்டு வருவதாக நோயுடன் படுக்கையில் கிடக்கும் தன் தாயினிடம் சொல்லிச்

சென்ற உத்தம குணமுடைய நாடகப்பெண் கோகிலம் திரும்பி வாராமல் போன விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம். கோகிலம் வெளியே சென்ற தினத்தில் ராஜலட்சுமியின் தூண்டுதலின் பேரில் பரோபகார சிந்தையுடையவரான செல்வநாதர் அவர்களுடைய இடத்துக்கு வந்து சிறிது பொருளுதவி செய்து விட்டுச் சென்றதால் அவள் அதைக்கொண்டு தன்னை அலங்கரித்துக்கொண்டு என்றுமில்லாத வகையில் சிறிது சந்தோஷத்துடனும் அழகாகவும் நாடக சாலைக்குச் சென்றாள். இனி தன் தரித்திரம் நீங்கிவிடுமென்றும், சௌகரியமான வாழ்க்கையை நடத்தக்கூடிய காலம் நெருங்கி விட்டதென்றும் அவள் நம்பி சந்தோஷப்பட்டதால் அந்த சந்தோஷம் அவளுக்கு உற்சாகமளிக்கவே அவள் தெம்புடன் இருந்தாள். எப்போதும் அவள் முகம் கவலையுடன் இருக்குமாயினும் அப்போது அவளது முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிற்று. ஆயினும் அவள் தன் உற்சாகத்திலும் சந்தோஷத்திலும் மதி மயங்கி தவறான துறையிலும் சென்றுவிடக் கூடிய அவ்வளவு அற்ப புத்தி யுடையவர்களாக இருக்கவில்லை. அப்போதும் கள்ளங்கபடமற்ற பரிசுத்த பார்வையே அவள் முகத்தில் பிரகாசித்தது. அவளது அழகையும் உற்சாகத்தையும் காணும் விடர்கள் அவள்மீது தங்கள் பார்வையைச் செலுத்துவார்களென்றும் அவளது நடை, உடை, பாவனை மட்டும் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

கோகிலம் நாடக சாலையையடைந்ததும் தன் கையிலிருந்த கடிதத்தைப் பொறுப்பான ஒரு உத்தியோகஸ்தரிடம் கொடுத்து அதை ராஜலட்சுமியிடம் கொடுத்து விடும்படி சொல்லிவிட்டு நடிகர்கள் ஒன்றாகக் கூடிக் கலந்தாலோசிக்கும் அறைக்குச் சென்று ஸ்டேஜ் மானேஜரிடம் சென்றாள்.

அப்போது ஐந்தாறு புதிய பெண்கள் நடனத்தைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். அதை இரண்டு மூன்று ஆடவர்களும் கவனித்துக்கொண்டிருந்தனர். கோகிலம் அந்த வாலிபர்களை நோக்கியதும் அவர்கள் பரிகாசம் செய்வார்களே என்னும் அச்சத்துடன் சரேலென்று ஸ்டேஜின் பின்புறத்திற்குப் போக முயன்றாள். அப்போது ஸ்டேஜ் மானேஜர் அவளை நிறுத்தி அவள் ஏன் சரியாக மூன்று மணிக்கே தன் கட்டளையின்படி வரவில்லையென்று கோபித்துக்கொண்டார். ஆயினும் திடீரென்று அவர் அவளுடைய உடையில் மாறுதலைக் கண்டதும், 'ஓஹோ! உனக்கும் நல்ல உடை அணிய வேண்டுமென்னும் புத்தி வந்து விட்டது போலும்!' என்றார். அப்போது அவள் சிறிது வெட்கத்துடன், 'ஐயா! நான் குறித்த நேரத்தில் வரத் தவறியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும், இனி நான் நாடகத் தொழிலுக்கு வர வேண்டிய அவசியமில்லாத சௌகரியமான நிலைமை எனக்கு வாய்த்திருக்கிறதென்பதைத் தெரிவிக்கவுமே நான் இங்கு வந்தேன்' என்று கூறினாள். சாதாரணமாக அப்படிப்பட்ட பெண்கள் ஏதேனும் காதலர்களின் மாய வலையில் சிக்கி விடுவது வழக்கமாயினும் உத்தமியான கோகிலம் அவ்வாறு செய்ய மாட்டாள் என்பதை அவளது களங்கமற்ற முகத்திலிருந்தே அவர் தெரிந்துகொண்டதால் மரியாதையாக, 'நீ நாடகத்தொழிலை விடுவதற்குரிய காரணமென்ன?' என்று ஆவலுடன் கேட்டார்.

அதற்கு அப்பெண், 'ஐயா உங்களுக்கோ அல்லது இங்குள்ள மற்றவர்களுக்கோ தவறான அபிப்பிராயம் ஏதும் ஏற்படாத வகையில் இதை நீங்கள் கேட்டு விட்டதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். என்னையும், என் தாயையும், என் சகோதரனையும் ஆதாவளித்துக் காப்பதற்காக ஒரு உத்

தம நண்பரை ஆண்டவன் அனுப்பி வைத்திருக்கிறுன்' என்று கூறினுள். அப்போது ஸ்டேஜ் மானேஜர் இன்னும் அதிக ஆர்வத்துடன், 'யார் அது? அந்த நண்பரின் பெயர் என்ன? என்று கேட்கவும் கோகிலம், 'ஐயா! அவர் அன்பும் தாராள நோக்கமுமுடைய வயதான கிழவர். அவரது பெயர் எனக்குத்தெரியாது. அவர் இன்று மாலை ஆறு மணிக்கு எங்கள் வீட்டுக்கு வந்து வேருெரு சௌகரியமான இடத்துக்கு எங்களை அழைத்துச் செல்லப் போகிறுர். அவர் எங்களிடம் அதிக அபிமானமுடையவராய் இருப்பதுடன் அதற்கேற்ப எங்களுக்குப் பல உதவிகளையும் செய்ய ஆரம்பித்துவிட்டார்' என்று சொல்லி முடித்ததும் அவள் முகத்தில் உண்மை ஒளி வீசியபடியால் அதற்குமேல் ஒன்றுங் கேட்க அவரால் முடியவில்லை. பரிசுத்தமான சந்தோஷக்குறி அவள் முகத்தில் பிரகாசித்தது. ஸ்டேஜ் மானேஜர் சாதாரணமாக நாடகப் பெண்களில் உத்தமிகள் கிடைப்பது அரிது என்னும் எண்ணமுடையவராயிருந்தும் கோகிலம் கூறியதில் மட்டும் சிறிதும் சந்தேகப்பட முடியாமல் அவள் கூறிய அனைத்தும் உண்மையே என்று நம்பி அன்பான வார்த்தைகளால், 'அம்மா! நீ சொன்னவைகளைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். கடவுள் கிருபையால் நீ சந்தோஷமான வாழ்க்கையையே நடத்துவாய் என்றும் நம்புகிறேன்' என்று கூறி அவளுக்கு விடை கொடுத்தனுப்பினர். அவளும் அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டுப் பின்னும் அங்கிருந்த தனக்கு அறிமுகமான பலரிடமும் தன் சங்கதிகளைத் தெரிவித்துவிட்டு அவர்களிடமும் அனுமதியும் ஆசியும் பெற்று அக் கொட்டகையை விட்டுத் தன் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டாள்.

கோகிலம் ஸ்டேஜ் மானேஜரைச் சந்தித்தபோது அங்கு நடனத்தைப் பயின்றுகொண்டிருந்த பெண்களைப் பார்த்துக்

கொண்டே சில ஆடவர்கள் நின்றிருந்தார்கள் என்று கூறி ளுேமல்லவா ! அவர்களில் சுமார் நாற்பது வயதான ஒருவர் கரிய உடைகளை அணிந்துகொண்டு பெரிய மனிதர்போல் நின்றுகொண்டிருந்தார். அவர் இன்னுரென்று கோகிலத்துக்குத் தெரியாதென்றாலும் அவர்மட்டும் கோகிலம் வந்ததும் அவளைக் குறிப்பாக அறிந்துகொண்டார். அவள் அவரை நன்ருகப் பார்த்திருந்தாலும் இதற்குமுன் அவரைக் கண்டிருப்பதாக அவளால் நினைக்க முடியாது. ஆயினும் அவர்மட்டும் அவளைப் பார்த்து அவள் இன்னவளென்றும் தெரிந்துகொண்டுவிட்டார். அவளை அவ்விடத்தில் பார்த்ததற்காக அந்தரங்கத்தில் சந்தோஷமும் அடைந்தார். அவள் ஸ்டேஜ் மானேஜரிடம் கூறியதை யெல்லாம் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார். ஆகவே அவள் புறப்படுவதற்கு முன்னரே அவர் வெளியே சென்று அவளது வரவை எதிர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்.

கோகிலம் நாடகசாலையை விட்டு வெளியே வந்ததும் அவர் அவளை அணுகி முன்பின் அவளுக்கு அதிகம் தெரிந்தவள்போல், 'உன் பெயர் கோகிலம்தானே' என்று பரிவுடன் கேட்டார். அவள் சந்தேகத்துடனும் ஆச்சரியத்துடனும் அவரைப் பார்த்துக்கொண்டே, 'ஆம்; என்பெயர் அதுதான்' என்று விடையளித்தாள். அப்போது அவர், 'நான் அப்படித்தான் நினைத்தேன். உன்னைப்பற்றி அவ்வளவு குறிப்பாக அறிவிக்கப்பட்டிருக்தேன்' என்றதும் அப்பெண் அச்சத்துடன், 'யாரால் அறிவிக்கப்பட்டீர்' என்று கேட்டாள். அதற்கு அவர் தந்திரமாக, 'என்னை இங்கு அனுப்பியவர் அவ்வளவு குறிப்பாகத் தெரிவித்தார். அவர்தான் உங்களுக்கு உதவி செய்யவந்த வயோதிகர், இன்று மாலை ஆறு மணிக்கு வருவதாகத் தெரிவித்துவிட்டுப் போனவர் அவர்தான்'

என்று கூறவும் அப்பெண், 'அவரா எனக்காக உம்மை அனுப்பினர். அவர் அனுப்பியது என்னிடம்தானு? இதில் தவறு ஏதேனும் இருக்குமோ' என்று பீதியுடன் கேட்கவே அவர், 'அப்படி யொன்றுமில்லை, பயப்படாதே. இதில் தவறு ஒன்றும் நிகழ்ந்துவிடவில்லை. அப்பெரியவர் இன்று குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே உன் வீட்டிற்குச் சென்று உன் தாயாரையும் சகோதரனையும் வேறு சௌகரியமான வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்! என்று அவர் கூறி முடிக்கு முன்னரே கோகிலம், 'ஆ! என்ன தாராளம்! என்ன அன்பு! நான் வெளியில் போனதற்காக என்மீது கோபித்துக் கொண்டாரோ?' என்று கேட்டாள்.

அப்போது அந்த மனிதர், 'கோபமில்லை. இனி நீ பழைய வீட்டுக்குப் போகவேண்டிய அவசியமில்லையாதலால் புதிய இடத்துக்கு உன்னை அழைத்துவரும்படி என்னை அனுப்பியிருக்கிறுர். நான் போனபிறகு நானும் அவருமாக வேறு இடத்துக்குச் செல்ல அவர் காத்திருப்பாராதலால் கொஞ்சம் வேகமாக நடந்து வா! என்று கூறினுர். அதற்கு அவள், 'நான் அவரை அநாவசியமாகக் காத்திருக்கச் செய்ய மாட்டேன்' என்று கூறிக்கொண்டே அவசரமாக நடந்தாள். இவ்வளவு பேசுவதற்குள் அவர்கள் சில தெருக்களைக் கடந்துவிட்டார்கள். உடனே அவர் ஒரு வாடகை வண்டியைப் பேசி அதன் ஆளிடம் ஏதோ சொன்னுர். இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டி மிக வேகமாக ஓடத் தொடங்கியது. அந்த மனிதர் நாடக சாலையின் ஸ்டேஜில் அவளைக் கண்டதுமுதல் இப்போது இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டதுவரையில் நடந்தவைகளெல்லாம் மிக அவசரமாக நடந்தபடியால் எதைப்பற்றியும் சிந்திக்க கோகிலத்துக்குச் சாவகாசமிருக்கவில்லை. வண்டியில் ஏறி உட்கார்ந்த

பின்னரும் அந்த ஆள், கோகிலத்துக்கு உதவிசெய்த பெரியாரின் தர்ம குணத்தைப் பாராட்டிக்கொண்டும், அவர் செய்த பல தர்மங்களைப்பற்றியும் சொல்லிக்கொண்டு சென்றதால் சொற்ப நேரம் வரை ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. ஆனால் சொற்ப நேரத்துக்குள் அவள் மனதில் ஒருவித எண்ணம் தோன்றிற்று. அதாவது அந்த ஆள் இவ்வளவு நேரமாகியும் பெரியாரின் பெயரைச் சொல்லவில்லை அல்லவா?' என்று நினைத்தாள். ஆகவே அதுமுதல் அவள் தன் பக்கத்திலிருந்த அந்த ஆளைக் கூர்மையுடன் கவனிக்க ஆரம்பித்தாள். அவர் கௌரவம் வாய்ந்த கனவானைப்போலவும், எத்தகைய தந்திர சூழ்ச்சிகளுமற்ற இருதய முடையவர்போலவும் காணப்பட்டதால் இதில் சூழ்ச்சி ஒன்றுமில்லையென்று நிச்சயித்துக்கொண்டாள். ஆகவே அவள், தான் போக வேண்டிய இடம் எங்கிருக்கிறதென்று அவரைக் கேட்டாள். அதற்கு அவர், அந்த இடம் இரத்தினபுரிக்கு வெளியில் கோமில்லா என்னும் அழகிய கிராமத்தில் இருப்பதாகச் சொன்னார். நோயாளியாகிய தன் தாய்க்குச் சுகாதார வசதியுள்ள ஒரு இடத்தை அவர் கண்டுபிடித்தார் என்பதால் அவளுக்குச் சந்தோஷமுண்டாகவே இதுதான் சமயமெனக் கருதி அவரும் பல விஷயங்களைப் பேசிக்கொண்டே வண்டி அதிக தூரம் போகும்படி செய்தார். வண்டியும் இரத்தினபுரிக்கு அப்பால் போய்விட்டது.

அப்போதும் கோகிலத்தின் மனதில் ஏதோ சந்தேகம் எழுந்தது. அச்சம் தோன்றியது. இவ்வாறு ஏற்படுவது சகஜம். உண்மைக்கு விரோதமான ஒரு காரியம் நடக்கும்போது எல்லாம்வல்ல இறைவன் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்படிபட்ட எண்ணத்தை உண்டாக்குவது இயற்கை. அவர் தனக்குச் சிந்திக்கச் சிறிதும் ஒய்வுகொடுக்

காமல் இப்படிப் பேசியதால் இதில் ஏதோ சந்தேகமிருக்கிற தென்று அவள் நினைத்து அவரைக் கூர்மையுடன் பார்த்தாள். ஆயினும் அவர் அதைக் கவனியாமல் வேறு பல புதிய விஷயங்களைப்பற்றிப் பேசலானார். அவள் அச்சத்தால் சிந்தனை செய்துகொண்டிருந்ததால் அவள் எதற்கும் பதில் அளிக்காமலிருந்தும் அவர்மட்டும் தன் பேச்சை நிறுத்தாமலே மேலும் மேலும் பேசிக்கொண்டிருந்தார். கோகிலத்துக்குமட்டும் அச்சம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஏதோ ஒரு இரகசிய சக்தி அங்கு நடப்பதெல்லாம் தவறு என்று அவளது உள்ளத்தில் உணர்த்திற்று. ஆகவே அவள் மறுபடியும் அந்த ஆளின் முகத்தை உற்றுப் பார்த்தாள். ஓஹோ! ஏதோ மர்மம் இருக்கிறது என்று உணர்ந்தாள். என்னசெய்வதென்று அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அந்த ஆள் கூறியதெல்லாம் சரியாயிருந்துவிட்டு அவள் அவசரப்பட்டு ஏதேனும் சந்தேகத்தை வெளியிட்டுவிட்டால் தனக்கு உதவிசெய்த அப்பெரியாருடைய மனம் புண்படுமே என்று அஞ்சினாள். ஆகவே என்ன ஆனாலும் சரி, முடிவு வரையில் எப்படி நடக்கிறது என்று பார்த்துவிடுவதென்று நிச்சயித்தாள். எனவே அவள் தன் மனதிலுள்ள சந்தேகங்கள் அம் மனிதனுக்குத் தெரியாதபடி அவள் சந்தோஷமும் உற்சாகமும் உடையவள்போல் பேச ஆரம்பித்தாள்.

இதற்குள் வண்டியும் கோமில்லா என்னும் சிறு ஊரை அடைந்தது. அங்குள்ள அழகான ஒரு பெரிய மாளிகையின் முன் அவ்வண்டி நின்றது. அம் மாளிகையைச் சுற்றிலும் உயரமான, அடர்ந்த மரங்கள் இருந்தன. அத்தோட்டத்தில் வண்டி நுழைந்து சென்று மாளிகையின் முன் நின்றதும் அம்மாளிகை தனக்கு உதவிசெய்த பெரியாருடையதாக இருக்கலாமென்று கோகிலம் நினைத்துச் சந்தோஷப்

பட்டாள். உடனே அந்த ஆளும் வண்டியை விட்டு இறங்கித் தன் கையைக் கொடுத்துப் பெண்ணையும் இறக்கினர். அச்சமும் சந்தேகமும் ஒருபுறமும், நம்பிக்கையும் தைரியமும் மற்றொரு புறமும் அவளை வாட்ட அவள் முன் செல்லவோ அல்லது பின்னுக்குச் செல்லவோ தைரியமில்லாதவளாய்ச் சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றாள். பிறகு தைரியம் செய்துகொண்டு எப்படியானாலும் ஆகட்டும் என்னும் எண்ணத்துடன் அம்மாளிகையில் அவருடன் நுழைந்தாள்.

பற்பல படங்களும் சிலைகளும் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அழகான அறையில் அவள் உட்காரவைக்கப்பட்டாள். எதிரில் மாடிக்கு ஏறும் அழகிய படிக்கட்டுகள் காணப்பட்டன. அந்த இடம் மிகப் பெரிய பணக்காரருடையதாக இருக்கவேண்டுமென்று நினைத்தும் அது சுகாதாரத்துக்கு ஏற்றதாக இருந்ததை எண்ணியும் சந்தோஷப்பட்டாள். ஆனால் மறு நிமிஷமே அவள் சந்தோஷமெல்லாம் மாயமாய்ப் பறந்துபோய்த் துக்கமாக மாறிற்று. ஏன்? எதிரிலிருந்த படிக்கட்டுகளின் வழியே மாடியிலிருந்து ஒருவர் இறங்கி வந்தார். அவர் இன்னாரென்று கோகிலம் தெரிந்துகொண்டதும் ஓவென்று கூச்சலிட்டாள். தலையிலடித்துக்கொண்டு அழுதாள். ஆயினும் என்ன பயன்! சிறையில் அகப்பட்டது போல் சிக்கிக்கொண்டாள். தன்னை அழைத்துவந்த ஆளும் சேவகனும் அவளையும், அவள் இன்னாரென்று அறிந்துகொண்ட அந்த மாளிகையின் சொந்தக்காரரையும் மட்டும் அங்கே விட்டுவிட்டு அவ்வறையின் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே சென்றனர். அவள் அச்சத்தாலும் பீதியாலும் மயக்கமடைந்து மூர்ச்சையானாள். சிறிது நேரத்துக்குப் பின் அவள் மூர்ச்சை தெளிந்து பார்த்ததில் அவள் தர்மலிங்

கம் பிரபுவின் மடியில் இருப்பதைக் கண்டு இன்னும் அதிகமாகத் தூக்கித்தாள். இந்த தர்மலிங்கம் பிரபு யார் என்பதை நேயர்கள் மறந்திருக்கமாட்டீர்களென்று நம்புகிறோம். கோகிலத்துக்கு நாடக உலகில் புகழ்பெற்ற ராஜலட்சுமியின் சிநேகம் கிடைக்குமுன் நாடகக் கொட்டகையில் அடிக்கடி கோகிலத்தைச் சந்தித்துத் தன் காதலியாக இருக்கும்படி கேட்டுக்கொண்ட, இரத்தினபுரியிலுள்ள பெரிய பணக்காரர்களில் ஒருவரான, காமவிகாரத்தில் தலைசிறந்த வயோதிகரேயாவார். வீடு போ போ என்றும் காடு வா வா என்றும் அழைக்கக் கூடிய நிலைமையிலுள்ள வயோதிகரான தர்மலிங்கம் பிரபு, 'சாகிற காலத்தில் சங்கரா சங்கரா' என்பதுபோலவாவது அக்காலத்திலேனும் தெய்வப் பிரார்த்தனையில் காலங் கழிக்காமலும், தன் செல்வத்தை நல்வழியில் செலவழிக்காமலும் கேவலம் பெண் பைத்தியம் பிடித்தவராய்ச் சிறு பெண்களைக் கெடுப்பதில் கவனம் செலுத்தினர். அந்தோ! இப்படிப்பட்டவர்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் வாழ்வும் ஒரு வாழ்வா!

36-வது அத்தியாயம்

சமுத்திர விலாச மாளிகை.

தர்மலிங்கம் பிரபுவின் மாளிகைக்கு சமுத்திர விலாச மாளிகை என்று பெயர். அம்மாளிகைக்கு உத்தமியான கோகிலத்தை அழைத்துவந்த அந்த மனிதர் யார் என்பதுபற்றிச் சிறிது விவரிக்க வேண்டியிருக்கிறது. தர்மலிங்கம் பிரபுபோன்ற அயோக்கியர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காகச் சில கைதேர்ந்த ஆட்களை அமைத்துக்கொண் டிருப்பது வழக்கம். அவர்கள் எதையும்

நியாயமா? அநியாயமா? என்றும் யோசிக்க மாட்டார்கள். தங்கள் எஜமானர்கள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்வதே பெரும்பாக்கியம் என்று கருதுவார்கள். அவரது பெயர் வீரபாலய்யா. அவர் தன் எஜமானின் இஷ்டப்படி யெல்லாம் நடப்பதே தனது மத தர்மமாகக் கொண்டவர். அவரை தர்மலிங்கம் பிரபு சிற்சில சமயங்களில் தனக்குச் சமமாகவும் நடத்துவதுண்டு. மாளிகை தர்மலிங்கம் பிரபுவினுடையதாயினும் அது வீரபாலய்யாவினுடையதோ என்று பிறர் சந்தேகிக்கும்படி அவ்வளவு சர்வாதிகாரம் வாய்ந்தவராக அவர் இருந்தார். அவர் பிரபு குலத்தில் பிறவாதவராயினும் தக்க கல்வியும் சாமர்த்தியமும் உடையவரா யிருந்ததால் எல்லாருடனும் சமயத்துக்குத் தக்கபடி சாமர்த்தியமாக நடந்துகொள்ளும் ஆற்றலுடையவராக இருந்தார். அவர் நன்கு உலக அனுபவம் பெற்றவராதலால் எல்லா வகையான மோசடிகளும் அயோக்கியத் தனமும் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. மேற்பார்வைக்குக் கௌரவமுள்ளவர் போலவும், யோக்கியர் போலவும் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் அவ்வளவு அயோக்கியராக இருந்தார். இந்த சம்பவம் நடப்பதற்குச் சில தினங்களுக்குமுன் தர்மலிங்கம் பிரபு வீரபாலய்யாவிடம் கோகிலத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்து அவளது அங்க அடையாளங்களை யெல்லாம் குறிப்பாகத் தெரிவித்து அவளை எப்படியாவது அடையவேண்டுமென்று தனக்கு ஆசை இருப்பதாகவும் வீரபாலய்யா அவளை எவ்வாறேனும் தன் மாளிகையில் கொண்டுவந்து விட்டுவிட்டால் தக்க சன்மானம் அளிப்பதாகவும் கூறி இருந்தார். சகஜமாகவே தர்மலிங்கம் பிரபு தாராளமாகச் சன்மானம் செய்பவராயும், அதிலும் இப்படிப்பட்ட பெண் விஷயத்தில் காரியத்தை முடித்துக்கொடுத்தால் எவ்வளவு வேண்டுமாயினும்

சன்மானம் செய்வாராதலாலும் வீரபாலய்யாவும் எப்படியாவது அக்காரியத்தை முடிப்பதென்று உறுதி செய்து கொண்டார். அவருக்கும் நல்ல காலமிருந்தால் அவரது முயற்சி விரைவிலேயே கைகூடிற்று. கோகிலத்தைப்பற்றி அவர் நன்ருகத் தெரிந்துகொண்டு நாடகமேடைக்குச் சென்ற முதல் தினமே அவர் அவளைச் சந்தித்துவிட்டதுடன் அவள் தன் வாலாற்றைப்பற்றி ஸ்டேஜ் மானேஜரிடம் கூறிக்கொண்டதையும் அவர் கேட்டுவிட்டதால் அதையே ஆதாரமாகக் கொண்டு அவளை ஏமாற்றி நாம் முன் அத்தியாயத்தில் விவரித்த விதமாக சமுத்திர விலாச மாளிகை யென்னும் தர்மலிங்கம் பிரபுவின் மாளிகைக்கு அழைத்து வந்துவிட்டார். உண்மையில் வீரபாலய்யாவுக்கு கோகிலத்தின் குடும்பத்துக்கு உதவிசெய்ய அப்பெரியாரைப் பற்றியோ அல்லது அவரது தர்ம குணங்களைப்பற்றியோ ஒன்றும் தெரியாது. கோகிலத்தை ஏமாற்றுவதற்காகவே அவரைப்பற்றி உண்மையைப்போல் பல விஷயங்களைச் சொல்லிக்கொண்டே அவளை மயக்கி அம்மாளிகைக்கு அழைத்து வந்துவிட்டார். அவரது எஜமானனுன தர்மலிங்கம் பிரபுவுக்குச் சந்தோஷம் அதிகரித்துவிட்டது.

இப்போது நாம் கோகிலத்தின் நிலைமையைக் கவனிப்போம். அப்பெண் மயக்கந் தெளிந்து பார்த்தபோது அதே அறையில் ஒரு அழகிய சோபாவில் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். நடுத்தர வயதான ஒருமாது அவள் இடப்போகும் வேலைகளைச் செய்யக் காத்திருந்தாள். கோகிலம் கண்ணைத் திறந்தும் அந்த அயோக்கியனுன கிழவன் அங்கு இருக்கிருனே என்று பீதியுடன் பார்த்தாள். அந்த மாது தவிர வேறு யாரும் அவ்வறையில் இல்லாததை கண்டு சிறிது சந்தோஷ மடைந்தாள். அவளது எண்ணத்தில் சிறிது நம்

பிக்கை உதயமாயிற்று. தன் இனத்தைச் சேர்ந்த ஒரு மாது தன் விடுதலை விஷயத்தில் உதவி செய்யமாட்டாளா என்று யோசித்தாள். ஆகவே அம்மாதின் முகத்தைப் பார்த்தாவது அவளது உள்ளத்தைத் தெரிந்துகொள்ளலாமென அவளது முகத்தைக் கோகிலம் உற்றுப் பார்த்தாள். ஆனால் அம்மாது அப்படிப்பட்ட நல்ல குணமுடையவளாகத் தோன்றவில்லை. அவளுக்கு வயது சுமார் நாற்பத்தாறு இருக்கும், அவள் முகத்திலிருந்தே அவள் காம விகாரத்தில் சிறந்தவளென்றும், தன் அழகைப் பயன்படுத்திக் கொண்டு வாலிபத்திலேயே கெட்டலைந்து தேகத்தைக் கெடுத்துக்கொண்டவள் என்று தெரிந்தது. கோகிலம் உலக அனுபவமற்றவளாயும், கள்ளங் கபடமற்றவளாயும் இருந்தும் அவளுக்குக்கூட அம்மாதின் குணதோஷம் நன்கு தெரிந்துவிட்டது. அவள் கூந்தல் சிறிது நரைத்திருந்த தென்றாலும் முகத்தில் வயோதிகக் குறி இருக்கவில்லை. கண்கள் சிறிது பிரகாசத்தை யுடையனவாகவே இருந்தன, எப்படியாயினும் அவள் தாராள நோக்கமும் அனுதாபமும் பரிசுத்த எண்ணமும் உடையவள் அல்ல என்றே நன்கு தெரிந்தது. ஆகவே கோகிலம் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு துக்க மிகுதியால் வாய்விட்டு அலறினாள்.

அப்போது அம்மாது, 'என தன்புள்ள பெண்ணே! நான் சொல்வதைக் கேள். நீ இம்மாதிரி யெல்லாம் எவ்வளவுதான் துக்கப்பட்டாலும் பிரயோசனப்படப் போவதில்லை. எனது பிரபு விருக்கிறவரையில் நீ இங்கிருந்துதான் தீரவேண்டும். ஆதலால் கஷ்டப்பட்டுக்கொண் டிருப்பதைவிட இந்த நிலைமையை நீயே மனமார ஏற்றுக்கொண்டு விடுவது நலம்' என்று இதோபதேசம் செய்ய முயற்சித்தாள். உத்தமியான அவள் இதைக்கேட்டதும், 'இல்லவே இல்லை.

அது முடியாது. இப்படி மானக்கேடான வாழ்வில் ஈடுபடுவதைவிட நான் என் உயிரை வேண்டுமாயினும் விட்டு விடுவேன்' என்று பரபரப்புடன் கூறிக்கொண்டே சோபாவினின்றும் குதித்தெழுந்தாள். அப்போது அந்த மாது, 'அவமானமா? யார் கூறியது? இந்த அர்த்தமற்ற வீண் வார்த்தையை நீ உபயோகிப்பாய் என்று முன்னமே அறிவேன். இது சோம்பேறிகளின் பேச்சல்லவா? மிக்க வறுமையுடன் கட்டத் துணியின்றியும், குடிக்கக் கூழ் இன்றியும் வருந்துவதுதானே அவமானம். அந்த வறுமையினின்றும் நீ விடுதலை யடைவதற்காக இங்கு கொண்டுவரப்பட் டிருக்கின்றாய் என்பதை அறிந்துகொள். அதைப்பற்றி இப்போது அதிகமாகப் பேச நான் விரும்பவில்லை. நாம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிவதற்குமுன் இதுபோன்ற பல பேச்சுகளைப் பேசத்தான் போகிறோம்,' என்றாள்.

அதைக் கேட்டதும் கோகிலம், 'ஓ! அப்படியானால் சட்டத்துக்கு விரோதமாகவும் நீங்கள் என்னை இங்கு சிறையில் வைக்க உத்தேசிக்கிறீர்கள் போலும்!' என்று கூறியதும் அம்மாது அசட்டுச் சிரிப்புடன் பரிகாசமாக, 'சட்டமா? சட்டம் யாருக்காக என்பது உனக்குத் தெரியாதா! ஏழைகளை நசுக்கவும் பணக்காரர்கள் சுகப்படவும்தானே சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன' என்று வியாக்யானம் செய்தாள். அப்போது கோகிலம் துக்கத்தால் தன் கைகளைத் தேய்த்துக்கொண்டே 'ஐயோ கடவுளே! நான் யாருடைய கையில் சிக்கொண்டேன்' என்று முறையிட்டாள். அதற்கு அம்மாது, 'உன் ஆயுள் முழுதும் உன்னைச் சௌகரியமாக வைக்க விரும்பியுள்ள ஒரு கனவானின் மாளிகையிலே இப்போது நீ இருக்கிறாய். நீ இஷ்டப்பட்டால் என்றுமில்லாத வகையில் சௌகரியமாக வாழலாம். கடவுள் உனக்கு இவ்

வாழ்க்கையை ஏற்படுத்தி யிருக்கிறார். நீயாக ஏன் அதைப் புறக்கணிக்கின்றாய்? பைத்தியக்காரத் தனமாக நடந்துகொள் ளாதே வீண் வேதாந்தங்கள் பேசிக்கொண் டிருப்பதில் என்ன பிரயோசனம்? உனக்கு வாய்த்த நற்சமயத்தைக் கைவிடாமல் சுகத்துக்கு வழியைத் தேடிக்கொள்,' என்றாள்.

கோகிலம் திடீரென்று தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டு தன் கண்களினின்றும் பெருகும் நீரைத் துடைத் துக்கொண்டே உறுதியான தொனியில், 'அம்மையே! தயவு செய்து நான் சொல்லப்போவதைக் கவனமாகக் கேள். எனக்கு ஒரு தாயார் இருக்கிறாள். அவளோ ஆபத்தான நிலைமையில் படுத்த படுக்கையில் காயலாவாக இருக்கிறாள். நான் நீண்டநேரம் அவள் எதிரில் இல்லாவிட்டால் அதனால் அவள் துக்கமடைந்து அவளது மரணம் சீக்கிரத்தில் சம்ப விக்கவும் கூடும். மேலும் சுமார் ஏழு வயதுள்ள சகோதரன் ஒருவன் இருக்கிறான். என் தாயாருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டால் நான் இங்கே இருக்கும்போது என் சகோ தரனுக்கு யார் துணை? ஆகவே உனக்கு ஏதேனும் கருணை அல்லது பச்சாதாபம் கடுகளவாவது இருந்தால் தயவு செய்து நான் என் வீட்டிற்குப் போய்வரச் சிறிது அனுமதி கொடு. நான் வெளியே போனதும் என்னை இத் தொந்தரைக் குள் ளாக்கியவர்களைத் தண்டிக்க முயற்சிக்க மாட்டேன். என் பிரார்த்தனையை நீ மறுப்பதாயின் நான் ஓவென்று அலறிக் கூச்சலிடுவேன். அக்கம்பக்கத்தில் நடமாடும் ஜனங்கள் என் சத்தத்தைக் கேட்காம லிருக்கமுடியாது. அதுவும் முடிய வில்லை யென்றால் இந்த ஜன்னல் பூமியின் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரமிருந்தாலும் சரி, இதன் வழியாகக் குதித்து இறந்துவிடுவேன். நான் இளமையும் பலஹீனமும் உள்ள வள் என்று நீ நினைக்கலாம். ஆயினும் நான் எதற்கும்

துணிந்துவிட்டேன். உயிரைத் திரணமாக மதிப்பவர்களுக்குச் சமுத்திரமும் முழங்கால் ஆழந்தானே?' என்று எச்சரிக்கையாகவும் கோரிக்கையாகவும் பேசினாள்.

அதற்கு அம்மாது, 'பெண்ணே! நீ கூறுவது ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. நீ சொல்கிறபடி செய்தால் அதுவும் வீரச் செய்கைதான். ஆயினும் என்னை வேண்டிக்கொள்வதில் ஒன்றும் பயனில்லை. என்னை வேண்டிக்கொள்வதைவிட இந்த சிலையை வேண்டிக்கொள்ளலாம். ஆனால் நீ நினைக்கிறபடி செய்துவிடுவது எளிய காரியமல்ல என்பதை நீ அறிந்துகொள்' என்று கடுமையாகக் கூறினாள்.

அப்போது கோகிலம், 'ஐயோ கடவுளே! அன்பும் அருளுக்கும் இருப்பிடமான பெண்மணி ஒருத்தி சிறிதும் கருணையின்றித் தன்னைக் கேவலம் ஒரு சிலைக்கு ஒப்பாகச் சொல்லிக் கொள்வதும் தகுமோ? ஆ! நீ பெண் அல்ல. பேயாகத்தான் இருக்கவேண்டும். அது கிடக்கட்டும். நான் சொன்னதுபோல் செய்வதைத் தடுக்க நீ யார்? நான் இடும் கூக்குரலால் அக்கம்பக்கத்தி லுள்ளவர்களெல்லாம் இவ்விடம் ஓடிவரவேண்டாமா?' என்று கத்திக்கொண்டே அருகிலிருந்த ஜன்னல் அருகில் ஒரே பாய்ச்சலாகச் சென்றாள். ஆனால் அந்த ஜன்னல் இரும்புக் கம்பிகளால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு வெறுப்புடன் திரும்பினாள், உடனே அதே அறையிலிருந்த வேறு இரண்டு ஜன்னல்களைப் பார்த்தாள். அவைகளும் அப்படியே இரும்புக் கம்பிகளால் மூடப்பட் டிருந்தன. ஆ! எப்படிப்பட்ட சிறையில் அவள் வெளியேற முடியாதபடி அடைபட்டிருக்கிறாள். அவள் மயக்கத்துடன் ஸ்மரணை யற்று விழுந்தாள். அதேசமயத்தில் அங்கிருந்த மாது சிரித்த அசட்டுச் சிரிப்பும் அவள் காதில் கேட்டது.

சற்றுநேரம் பொறுத்து கோகிலம் ஸ்மரணை பெற்றதும் அம்மாது, 'பெண்ணே! பார்த்தாயா? உன் பயமுறுத்தல்க ளெல்லாம் நடக்காது. இம்மாளிகையின் எல்லா ஜன்னல் களுக்குமே இவ்வாறு கம்பிபோடப்பட் டிருக்கிறது. ஆகவே நீயாக அழித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும் அது ஆகாத காரியம். மேலும் இங்கிருந்து நீ எவ்வளவு தான் கத்தினாலும் யாரும் உனக்குத் துணை வரமாட்டார்கள். யாரோ விசித்திரமான பைத்தியம் அக்கட்டடத்தில் இருக்கிற தென்றுதான் நினைப்பார்கள்,' என்று கூறியதும் கோகிலம், 'ஐயையோ! அப்படியானால் இதென்ன பைத்தியக்கார ஆஸ் பத்திரியா? இதென்ன அவமானம்? எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன?' என்று கேட்க அம்மாது 'உன்னை இங்கு அழைத்துவந்த வீரபாலய்யா ஒரு பைத்தியக்காரர் விடுதியை வைத்திருக்கிறு ரென்றே நினைக்கவேண்டும்,' என்று கூறக் கோகிலம், 'போதும், போதும் இனி ஒன்றும் சொல்ல வேண்டாம்' என்று கூறிக்கொண்டே தன் இரு கரங்களா லும் முகத்தை மூடிக்கொண்டு அழவே கைவிரல்களின் நடுவினின்றும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று.

அப்போதும் மன மிரங்காமல் அம்மாது கோகிலத்தைத் துக்கப்படுத்துவதிலேயே அதிக சந்தோஷ முடையவள் போல், 'பெண்ணே! நீ என்ன செய்தாலும் இங்கிருந்து தப் பிச் செல்ல முடியாது. மரியாதையாகக் கடவுள் காண்பித் திருக்கும் இந்த வழியில் மனமார இறங்கிவிடு. இதனால் உனக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாது. நீ எந்த அறையில் இருக்க விரும்புகிறுயோ அங்கு கொண்டுபோய் உன்னை விடுகிறேன். இப்போதே வரவேண்டு மென்பதில்லை. நீர ஆலோசித்துப் பார். வேண்டுமாயின் இன்னும் இரண் டொரு மணிநேரம் கழித்து வருகிறேன். இதற்குள்

யோசித்துவை,' என்றாள். இதைக்கேட்ட கோகிலம் சிறிது சிந்தித்துப்பார்த்து தான்போய்த் தங்கி யிருக்கவேண்டிய இடத்தை முன்னதாகவே தெரிந்துகொள்வது நலமெனக் கருதித் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அம் மாதினுடன் வருவதாகத் தெரிவித்துவிட்டாள். ஆகவே அம் மாதும் அப்பெண் விதியில்லாமல் தன் வழிக்கு வந்ததைக் கண்டு பரிகசித்தவண்ணம் அவளை அழைத்துச் சென்றாள். அவ்வறையைவிட்டுச் சென்றதும் ஒரு ஹாலுக்குச் சென்று அங்கிருந்து அழகிய படிக்கட்டுகளின் வழியே மாடிமீது ஏறிப்பல அறைகளையும் கடந்து சென்று இறுதியில் மூன்று அறைகள் ஒன்றாகச் சேர்ந்த அறையில் நுழைந்தார்கள். அதில் முதல் அறை சாப்பிடுவதற்கும், இரண்டாவது உடைகளை அணிவதற்கும், மூன்றாவது படுக்கைக்கும் ஏற்றதாக இருந்தது. அந்த மூன்று அறைகளுக்கும் மாளிகையின் பின்புறப் பக்கமாக மூன்று ஜன்னல்கள் இருந்தன. ஆனால் அவைகளும் இரும்புக் கம்பிகளால் மூடப்பட்டிருந்தன. மாளிகையின் பின்புறத்தில் தோட்டங்களும் அதற்குப்பின்னால் பசும் புற்றரையும் விசாலமாகக் காணப்பட்டபடியால் ஜன்னல் வழியே வெளியே பார்த்தால் அக்காட்சி ரம்மியமானதா யிருந்தது.

அவ்வறையில் நுழைந்ததும் அம்மாது கோகிலத்தைப் பார்த்து, 'பெண்ணே! இதுதான் உனக்காக நியமிக்கப்பட்ட அறை. இதில் நிறைய ஆடைகளும் அலங்காரத்துக்கு வேண்டிய சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. உனக்கு வேண்டியவைகளை நீ அனுபவித்துக்கொள்ளலாம். அங்குள்ள சில உடைகளை நீ அணிந்தால் நீ ஒரு பெரிய கோடீஸ்வரரின் மனைவியைப்போலக் காணப்படுவாய். ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு மணி வைக்கப்பட் டிருக்கிறது.

அதை நீ அடித்தால் வேலைக்காரிகள் நீ இடும் வேலையைச் செய்ய ஓடோடியும் வருவார்கள். ஆகார வேளையில் பல விதமான பதார்த்தங்களடங்கிய ஆகாரம் உன் மேஜைமீது வைக்கப்படும். சுருங்கக் கூறின் உனக்கு வேண்டிய எல்லா வகையான இன்பங்களும் இங்கே கொடுக்கப்படும். நடு அறையில் சில புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டும் போது அதையும் படிக்கலாம். இதோ இந்த அறையின் பின்னுலிருக்கும் தோட்டத்துக்கும் சென்று மாலை வேளைகளில் உலாவலாம். தர்மலிங்கம் பிரபுவின் கட்டளையின் படியே இதையெல்லாம் உனக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறேன். உண்மையை மறைத்து வைப்பதில் பிரயோசனமில்லை. இப்போது தற்காலிகமாக நீ இங்கு சிறைப்பட்டிருக்கிருய். ஆயினும் நீண்டகாலம் இவ்வாறு இருக்க வேண்டியதில்லை. எவ்வளவு விரைவில் விடுதலை பெறலாமென்பது உன்னைப்பொருத்தே இருக்கிறது. இப்போது இஷ்டப்பட்டாலும் நீ இம்மாளிகையின் எஜமானி யாகிவிடலாம். ஆகவே உன் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி உன்னிடமே இருக்கிறது. ஆகையால் நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை' என்று கூறி முடித்தாள்.

இவ்வாறு அம்மாது கூறும்போதெல்லாம் கோகிலம் பீதியுடன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தபடியால் எவ்வித மறுப்பும் சொல்லாமல் இருக்கவே அம்மாது எத்தகைய தங்கு தடங்கலு மின்றிப் பேசி முடித்தாள். அம்மாது பேசும்போது கோகிலம் பைத்தியக் காரியைப்போல் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படிப் பார்த்தாலும் அவளுடைய புத்தி வெளியே காணப்பட்ட இயற்கை யழகில் செல்லவில்லை. எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உடல்மட்டும் அங்கிருக்

ததே யொழிய அவளது மனம் வேறு எங்கோ சென்றிருந்தது. தன்னுடைய திக்கற்ற ஆபத்தான நிலைமையைப்பற்றிய துயரமே அவளுக்கு அதிகமா யிருந்ததால் அதைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தாள். ஆகவே அவள் மெய் மறந்திருக்கிறாள் என்பதை அம்மாது அறிந்து மெதுவாக எழுந்து அவ்வறையைவிட்டுச் சென்றாள். அவள் வெளியே போனதும் கதவைச் சாத்திக்கொண்டு வெளிப் பக்கமே பூட்டுவதைக் கோகிலம் அறிந்து மிகவும் துக்கப்பட்டாள். ஓவென்று அலறி அழுதாள்.

ஆ! அப்போது அவள் மனதில் தோன்றிய எண்ணங்கள் தான் என்ன? முன்னமே பரிசுத்த உள்ளமுடைய அவள் மீது அவளுடைய தாயார் சந்தேகப்படவில்லையா? அப்படியிருக்க இப்போது இவ்வளவு நேரமாகியும் அவள் வீட்டுக்குச் செல்லவில்லை யென்றால் அவளைப்பற்றி அவளது தாயார் மிகக் கேவலமாக நினைக்கமாட்டாளா? இன்னும் தன் தாயாரைக் கண்டு தனக்கு நேர்ந்த கஷ்டத்தைக் கூறுவதற்கு எவ்வளவு காலமாகுமோ? அதுமட்டுமா! இம்மாளிகையைவிட்டு வெளியேறும்போது பரிசுத்தமாகவும் குற்றமற்ற தன்மையிலும் வெளிப்படமுடியுமா? என்பனபோன்ற எண்ணங்கள் அவள் மனதில் உதித்தன. இப்படிப்பட்ட எண்ணங்கள் உதித்து மனம் அதிகக் கஷ்டப்பட்டதால் தன் சிந்தனையை வேறு விதத்தில் செலுத்தும்பொருட்டு அவள் தான் அடைபட்டிருக்கும் அந்த அறையைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள். அவ்வாறு பார்த்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. இரவில் தர்மலிங்கம் பிரபு திடீரென்று இரகசியமாக வந்துவிட ஏதேனும் வழி இருக்கிறதோ என்று பார்த்தாள். அவளுக்காக ஒதுக்கப்பட்ட மூன்று அறைகள் ஒன்றாகச் சேர்ந்த அப்பெரிய அறை அவ்வீட்டி னின்றும் பிரிக்கப்பட் டிருந்

தது. ஆயினும் அதன் கதவு திறக்கப் படும்போது பெரிய சப்தமாகாமல் இருக்க முடியாது என்பதை உணர்ந்தாள். இன்னும் எங்கேனும் இரகசிய வழி இருக்குமோ என்று எவ்வளவோ தேடிப்பார்த்தாள். தனக்குத் தெரியாமல் அப் பிரபு திடீரென்று வரமுடியாது என்பதை நிச்சயமாக அறிந் தாள்.

மேலும் சிறிது நேரத்துக்குமுன்வரை அவளுடன் பேசிக் கொண்டிருந்த அம்மாது சொல்லியதிலிருந்து தர்ம லிங்கம் பிரபு, கோகிலம் அவரது வழிக்கு வரும்வரையில் அவளை அங்கேயே அடைத்துவைத் திருப்பதென்றும், அது வரை வற்புறுத்திப் பார்ப்பதென்றும் முடிவு செய்திருப்ப தாகத் தெரிந்தது. ஆகவே சொற்ப தினங்களுக்குள் எப் படியாவது அங்கிருந்து வெளியேறிவிட முயற்சி செய்வ தென்று தீர்மானித்துக்கொண்டாள். ஆகவே அவள் தன் மனத்துக்குள், 'சீ! இப்படி துயரப்படுவதில் பிரயோசன மில்லை. இதனால் எனக்குத்தான் பலஹீனம் ஏற்படும். யார் தனக்குத் தான் உதவி செய்துகொள்கிறார்களோ அவர்க ளுக்குத்தான் கடவுளும் உதவி செய்வாராதலால் நான் தைரி யத்தை மேற்கொண்டு இனி நடக்கவேண்டிய காரியத்தைப் பற்றி யோசிக்கிறேன்,' என்று நினைத்துக்கொண்டாள். இவ் வாறு தன்னைத் தான் தேற்றிக் கொண்டதால் அவள் சிறிது மன நிம்மதி யடைந்தாள். ஜன்னலுக்கு வெளியே காணப் படும் இயற்கை யழகைக் கண்டு களித்தாள். பிறகு புஸ்தக பீரோவில் என்னனென்ன புஸ்தகங்கள் இருக்கின்றன என்று பரிசோதித்தாள். அதில் பற்பலவிதமான புஸ்தகங் கள் இருந்தன. சில புஸ்தகங்கள் அவளது சுபாவத்துக் கேற்றவையாகவும் இருந்தன. ஆகவே ஒரு புஸ்தகத்தை யெடுத்து அதைப் படிக்க முயன்றாள். ஆயினும் அப்படிப்

பட்ட சங்கடமான நிலைமையில் இருக்கும்போது யாருக்குத் தான் படிக்க மனம் செல்லும்? ஆகவே அவள் அப் புஸ்தகத்தை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு சுமார் மணி ஏழு இருக்கும். அப்போது அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. வேலைக்காரி ஒருத்தி தேயிலைப் பானத்தை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அம்மாதைக் கண்டதும் அவள் முன்பு வந்த மாது அல்ல என்று தெரிந்ததும் கோகிலம் சிறிது சந்தோஷப்பட்டாள். ஆயினும் இப்போது வந்த வேலைக்காரியும் அவளுக்கு எவ்வகையிலும் உதவி செய்யக்கூடியவளாகத் தோன்றவில்லை. அவள் சுமார் முப்பது வயதானவளாயும், மெல்லிய தேகத்தை யுடையவளாயும். சிறிதும் பச்சாதா மற்றவளாயும் காணப்பட்டாள். ஆகவே கோகிலம் அவளுடன் ஒன்றும் பேசாமல் அவள் கொண்டுவந்த சிற்றுண்டியைமட்டும் விரைவில் அருந்தினாள். வேலைக்காரி பாத்திரங்களை எடுத்துக்கொண்டு வெளியே போகும்போது கோகிலத்தினிடம், 'அம்மா! நமது தர்மலிங்கம் பிரபு இப்போதே உன்னைப் பார்த்துப் பேசவதென்று யோசித்திருந்தார். ஆனால் அவர் மிக அவசரமாக இரத்தினபுரி நகருக்குச் சென்றதால் நாளைவரை அவர் உன்னைக் காணமுடியாது' என்று தெரிவித்தாள். அப்போது கோகிலம் அவ்வேலைக்காரியினிடமிருந்து சில விஷயங்களைக் கிரகிப்பதற்கு அதுதான் சமயமென்று அறிந்து, 'அம்மணி! பிரபு எப்போதும் இங்கே தான் வசிக்கிறாரோ?' என்று கேட்டாள்.

அதற்கு அவள், 'இல்லை, இல்லை. அவருக்கு இரத்தின புரி கீழ்ப்பாக்கத்திலும் ஒரு திவ்யமான பங்களா இருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா?' எனவும் கோகிலம்,

'இல்லை. எனக்குப் பிரபுவைப்பற்றி ஒன்றும் தெரியாது. என்னை இந்த அறைக்கு அழைத்துவந்த அம்மாது யார் என்பதைச் சிறிது தயவு செய்து தெரிவிக்க முடியுமா?' என்று வணக்கத்துடன் கேட்டாள். அப்போது வேலைக்காரி, 'அம்மாது இவ்வீட்டை நிர்வகிப்பவள். அவள் பெயர் மங்களம் என்பார்கள். என் பெயர் அம்புஜம். உன் பெயர் தான் கோகிலம் என்று நினைக்கிறேன்' என்று சொல்லிமுடித்தாள். அதற்குக் கோகிலம், 'ஆம், என் பெயர் கோகிலம் தான். இந்த வீட்டில் அதிகம் ஜனங்கள் இருக்கிறார்களோ? அதாவது என்னைப்போன்ற நிலைமையில் இன்னும் யாராவது இருக்கிறார்களா? என்று கேட்டதும், அவள் அப்படிப்பட்ட கேள்வி கேட்டதன் காரணம் என்னவென்று யூகித்தறிபவள் போல் அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டே, 'இல்லை. அப்படி யாருமில்லை. உனக்கு இராச் சாப்பாடு எப்போது கொண்டு வரட்டும். ஏதேனும் உனக்கு வேண்டிய சௌகரியங்கள் விஷயமாக என்னிடம் சொல்லவேண்டியிருக்கிறதா?' என்று கேட்கவும் கோகிலம், 'இன்றிரவு எனக்கு இப்போது கொடுத்த ஆகாரத்தைத் தவிர வேறு ஒன்றும் வேண்டியதில்லை' என்று கூறினாள்.

அம்புஜம் என்னும் வேலைக்காரி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவ்வறையை விட்டு வெளியே போய்க் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு சென்றாள். பிறகு மிகவும் சிரமமாகவும் வியாகுலத்துடனும் இரண்டு மணி நேரம் கழிந்தது. ஏனெனில், பாவம்! கோகிலம் அடிக்கடி தன் தாயாரையும், சகோதரனையும் பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியவில்லை. மேலும் தன் குடும்பத்துக்கே பேருபகாரியாக வந்த அந்த வயோதிகரின் பெயர் அவளுக்குத் தெரியாவிட்டாலும் அவர் தன்னைப்பற்றி என்ன நினைப்பாரோ என்னும் கவலை

அடிக்கடி அவளை வாட்டியது. தான் இவ்வாறு காணமற் போனதால் அந்த வயோதிகர் அக் குடும்பத்துக்கு உதவி செய்ய இஷ்டப்படாமல் தாயாரையும் சகோதரனையும் கஷ்டத்தில் விட்டுவிட்டால் என்ன செய்வது என்னும் துக்கம் வேறொருபுறம். இவ்வாறு அவள் இரண்டொரு மணிநேரம் வரை எவ்வளவு துக்கப்பட்டிருப்பாள் என்பதுபற்றி நாம் அதிகம் எழுதத் தேவையில்லை. எவ்வளவோ நாவல்களை வாசித்துத் தேர்ந்த அறிவுபெற்ற நமது நேயர்கள் கோகிலத்தின் துயரத்தை யூகித்தறிந்து கொள்வார்களென்றே நம்புகிறோம்.

அன்றிரவு சுமார் ஒன்பது மணிக்கு வேலைக்காரி அம்புஜம் ஒரு தட்டில் ஆகாரத்தை எடுத்துக்கொண்டு ஒரு மெழுகுவர்த்தி விளக்குடன் அங்கே வந்தாள். அவள் இந்த ஆகாரத்தைக் கோகிலத்துக்குக் கொடுக்கும்படி மங்களம் கட்டளை யிட்டதாகவும், இன்னும் ஏதேனும் தேவையாயினும் கொடுப்பதாகவும் கூறினாள். ஆனால் கோகிலம் வேறு ஒன்றும் தேவையில்லை யென்று கூறிவிட்டாள். ஆகவே வேலைக்காரி தான் கொண்டுவந்ததை அங்கே வைத்துவிட்டுப் போய்விட்டாள். அவள் வெளியில் பூட்டிக்கொண்டு சென்றாளென்றாலும் கோகிலமும், தனக்கும் தெரியாமல் எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதற்காக உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டதுடன் கதவின் பின்னால் ஒரு நாற்காலியையும் சார்த்தி வைத்தாள். சுமார் பத்துமணி இருக்கும் சமயத்தில் அவள் ஓய்வெடுத்துக் கொள்வதென நினைத்தாள். அவள் மனமும் தேகமும் ஓய்ந்துவிட் டிருந்தபடியால் தலையைக் கீழே வைத்ததும் மெய்மறந்து தூங்கிவிட்டாள். தனக்கும் தெரியாமல் யாரும் அவ்வறையில் வர முடியாதபடி அந்த அறை சர்வ ஜாக்கிரதையுடன் இருப்பதாக அவள் நினைத்தாள். ஆகவே மன நிம்மதியுடன் அவள் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

37-வது அத்தியாயம்

ஆச்சர்ய சம்பவங்கள்

கோகிலம் அந்த அறையில் எவ்வளவு நேரம் தூங்கினாள் என்பது அவளுக்கே தெரியாது. ஆனால் திடீரென்று இருந்தாற்போலிருந்து அச்சத்தை யூட்டும் கனவைக் கண்டவள்போல் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவள் தூங்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் விளக்கை அணைத்துவிட் டிருந்தபடியால் அறை இருட்டாக இருந்த தென்றாலும் நிலா வெளிச்சம் அதிகமாயிருந்தபடியாலும், அறையில் ஜன்னல்கள் திறந்து மெல்லிய மஸ்லின் துணியால் திறைபோடப்பட் டிருந்தபடியாலும் அறையில் சாமான்களும் கண்ணுக்கு நன்றாகத் தெரிந்தன. ஆகவே அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டதும் அச்சத்துடன் அந்த அறையை சுற்றிப் பார்த்தாள். ஆனால் அவள் பயப்படும் விதமாக அங்கு ஒன்றும் இருக்கவில்லை. எனினும் அவளது மனதில் மட்டும் ஒருவிதமான பயம் இருந்து கொண்டுதான் இருந்தது. அவள் நெற்றியில் வியர்வை அதிகமாக இருந்தது. கைகால்களெல்லாம் அச்சத்தால் ஜில்லிட்டிருந்தன. தான் கண்ட கனவு என்ன என்பது பற்றி நிதானமாகச் சிந்திக்கலானாள். ஆனால் அவள் கனவு கண்டாளோ என்பதே சந்தேகமாய்ப் போய்விட்டது. அது கனவோ அல்லது வேறுவிதமான பயமோ அவளைத் திடீரென்று எழுப்பிக் கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டது.

இவ்வாறு அவள் சிந்தனையில் மூழ்கியிருந்த சிறிது நேரத்துக்குப்பின்னர் யாராவது நடந்தால் அதனால் ஆடை அசைவினால் ஏற்படுவதுபோன்ற சத்தம் அவ்வறையில் ஏற்

பட்டது. நிதானமாகக் கேட்டுப் பார்த்தாள். சத்தம் நன்ருகக் கேட்கிறது. ஆகவே அச்சத்தால் அவள் தேகம் முழுதும் வியர்த்துவிட்டது. ஆனால் அடுத்த நிமிஷமே எத்தகைய சத்தமுமின்றி நிசப்த மாய்விட்டது. அது என்ன சத்தம் என்று அவளுக்குத் தெரியவில்லை. அதனால் அச்சம் அதிகரித்து விட்டது. படுக்கையினின்றும் எழுந்துபோய் அறையைச் சுற்றிப் பார்ப்பதற்கும் அவளுக்குப் பயம். சிறிது நேரத்துக்குப்பின் மறுபடியும் ஆடை அசைவு சத்தம் கேட்டதுடன் திரையை விலக்கிக்கொண்டு ஒரு மனித உருவம் அறையில் பிரவேசிப்பதைப்போல் தோன்றியது. அவள் ஓவென்று கூச்சலிட முயன்ருள். ஆனல் அவள் நா எழவில்லை. அந்த உருவத்தைப் பார்க்கவும், அது நிற்கும் பக்கம் தன் பார்வையைச் செலுத்தவும் அஞ்சினள். ஆயினும் மறுநிமிஷமே அந்த உருவம் தன் முகமூடியை அப்புறப் படுத்திக்கொண்டு அவளது முகத்தை உற்றுப் பார்த்தது போல் தோன்றிற்று. அதன் முகம் வெளுத்துப் பயங்கரமாக இருந்ததால் அது மற்ருெரு உலகத்திய சஞ்சாரியாக இருக்க வேண்டுமென்று கோகிலம் நிச்சயித்துக்கொண்டாள். ஆகவே அவள் பயத்தால் ஓவென்று அலறினள். அவளது ஸ்மரணையும் தப்பிற்று.

அவள் மறுபடியும் ஸ்மரணை பெற்றுப் பார்த்தபோது சூரியன் பிரகாசித்துக்கொண் டிருந்தான். அவள் இருந்த அறை வெளிச்சமாக இருந்தது. அறைக்கடுத்த தோட்டத்தில் பட்சிகள் பாடிக்கொண்டிருந்தன. எல்லாம் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருந்தன. இரவில் அவள் கண்ட பயங்கரத் தோற்றம் அவளது ஞாபகத்துக்கு வந்தது. உடனே பயத்துடன் மீண்டும் அவ்வுருவம் அங்கு இருக்குமோ என்னும் எண்ணத்துடன் அறையின் நாலா பக்கத்தி

லும் பார்த்தாள். ஆனால் அவள் அச்சப்படும்படி அங்கு ஒன்றும் இருக்கவில்லை. ஆதலின் அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு நன்றாக நாற்புறமும் பார்த்தாள். தைரியத்துடன் படுக்கையைவிட்டு இறங்கினாள். தான் அச்சப்படுவதற்கு ஒன்றுமில்லை யென்று தெரிந்து கொண்டாள். தான் கண்ட ஒவ்வொன்றைப்பற்றியும் நிதானமாகச் சிந்திந்தாள். ஆனால் முதல் முறை அவள் திடீரென்று எக்காரணத்தாலோ விழித்துக்கொண்டபின்னர் தூங்கவில்லை யல்லவா? அப்படியிருக்கும்போதுதான் கண்ட உருவம் முதலியன கனவு என்று எப்படி நினைப்பது என்று யோசித்தபோதுதான் அது ஏதோ மர்மமான விஷயம் எனத் தெரிந்தது. எனினும் அந்த உருவம் ஏதோ பேய், பிசாசாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்தாள். ஏனெனின் இவ்வுலக மனிதனாக இருந்தால் கதவுகளெல்லாம் மூடப்பட்டிருக்கும்போது எப்படி வர முடியும்?

கோகிலம் மெதுவாக எழுந்து சாப்பாட்டு அறையில் போய்ப் பார்த்தாள். அதன் அறையும் நன்றாக மூடப்பட்டிருந்தது. அங்கிருந்து அவள் ஆடைகளை அணியும் அறைக்குப் போய்ப் பார்த்தாள். அதன் கதவும் பத்திரமாக மூடப்பட்டிருந்தது. ஆகவே அது வெறும் கனவுதான் என்று அவள் கருதினாள். ஆனால் உண்மையில் நிகழ்ந்தது போல் அக்கனவு இருந்ததால் அதிக ஆச்சர்யப்பட்டாள். இதனால் பேய், பிசாசுகளை மக்கள் அவசியம் நம்பும்படி ஏற்பட்டு விடுகிறதே என்றும் நினைத்தாள். கனவுதான் என்று நினைத்தாளே யொழிய மனதில்மட்டும் சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. அதனால் அச்சம் அவளை விட்டபாடில்லை. அவள் அலங்கரித்துக்கொள்ளும் அறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டபோதும் அடிக்கடி

அச்சத்தால் நாற்புறமும் பார்த்தாள். வெளுத்த முகத்துடன் அந்த பயங்கரத் தோற்றம் தன் பின்னல் நின்றிருக்குமோ என்று நினைத்தாள். பிறகு அவள் வேறு ஆடைகளை அணிந்துகொண்டு அறையின் கதவுக்குப் பின்னல் சார்த்தி வைத்திருந்த நாற்காலியை எடுத்து அப்புறம் வைத்து அதில் உட்கார்ந்தபோது அம்புஜமும் காலை ஆகாரத்தை எடுத்துக் கொண்டு அங்கு வந்தாள். பலவகையான ஆகாரத்தை அவள் அங்கு மேஜையின்மீது வைத்தா ளென்றாலும் ஒரு ரொட்டித் துண்டையும் ஒரு கோப்பை தேயிலைப் பானத்தை மட்டும் கோகிலம் எடுத்துக்கொண்டாள். பிறகு முன்னாள் இரவு நடந்த சம்பவத்தை அவ் வேலைக்காரியிடம் சொல்ல லாமா என்று நினைத்தாள். அவ்வாறு சொல்வதால் 'சுவரோ டாயினும் சொல்லி யழு' என்பதுபோல் அவளிடம் சொல் லிக் கொள்வதால் தனக்குச் சிறிது ஆறுதல் ஏற்படுவதுடன் ஏதேனும் ஆள் உண்மையிலேயே அங்கு பிரவேசிக்க முடி யுமா என்னும் உண்மையையும் அவள் வெளிப்படுத்தலாம் என்றும் நினைத்தாள். ஆயினும் அம்புஜம் அவளுடன் சினேக முறையிலோ அனுதாபத்துடனே பேசாமல் இருந்த தாலும், அவள் முகத்திலேயே பயங்கரம் காணப்பட்டதாலும் அவளிடம் சொல்ல மனம் வரவில்லை. ஆகவே தன் மனத் துக்குள்ளேயே எதையும் சிந்தித்தாள்.

காலை ஆகாரம் அருந்திய பின்னர் மங்களம் என்னும் மாது கோகிலத்தின் அறைக்கு வந்தாள். மங்களத்தைப்பற் றிக் கோகிலத்துக்கு தெரியா தென்றாலும் அவள் அயோக் கியத்தனம் மிக்கவள் என்று நிச்சயமாகத் தெரிந்ததால் அவ ளைப் பார்க்கும்போதே கோகிலத்துக்கு அருவருப்பு தோன் றியது. ஆகையால் அவள் அம்மாதைக் கண்டதும் அவளை விரும்பாதவள்போல் அலட்சியமாக ஒரு பக்கத்தில் உட்

கார்ந்துகொண்டாள். அவள் அங்கு வந்ததைவிடத் தான் தனியாக இருந்து பல விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பதே நலமாக இருந்திருக்குமென்று அவளுக்குத் தோன்றியது. மங்களம் கோகிலத்தின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே, 'பெண்ணே! உனக்குவேண்டிய சௌகரியங்களெல்லாம் அளிக்கப்பட்டனவா என்றும், இப்போது உன் மனோநிலை எவ்வாறு இருக்கிறதென்றும் அறிந்துகொண்டு செல்லவே நான் வந்தேன்' என்று கூறினாள். அப்போது கோகிலம், 'இந்த உலகத்திலுள்ள செல்வத்தையெல்லாம் என்னிடம் ஒப்படைத்தாலும் நான் இப்போதுள்ள நிலைமையில் அச் செல்வம் எனக்கு எப்படிப்பட்ட சந்தோஷத்தையும் அளிக்கப் போவதில்லை. என் மனோநிலை சம்பந்தப்பட்டவரையில் உன்னைப்போன்ற கல்மனம் படைத்தவர்களால் அதைத் தெரிந்துகொள்ள முடியாது,' என்று கண்டிப்பாகக் கூறினாள். அதற்கு அம்மாது வழக்கப்படி பரிகாசத்துடன், 'ஓ, பெண்ணே! இன்னும் நீ உன் உறுதியினின்றும் இறங்கவில்லை போலும்! பார்க்கலாம்,' என்று வேடிக்கையாகப் பேசினாள். அதற்குக் கோகிலம் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அம்மாதுடன் சொற்போர் தொடுக்க அவள் விரும்பாததே அதற்குக் காரணம்.

மீண்டும் மங்களம் என்னும் அம்மாது கோகிலத்தினிடம், 'நீ இன்னும் பிடிவாதமாக இருப்பதைக் காண நான் வருந்துகின்றேன். இதனால் உனக்குச் சமாதானமோ அமைதியோ ஏற்படாது. தர்மலிங்கம் பிரபு மத்தியானம் இங்கே வரப் போகிறார். அப்போது அவர் உன்னைப் பார்க்கலாம். நீ அவருடன் மரியாதையாகவும் பிரியத்துடனும் பேசுவதே உனக்கு நன்மையைத் தரும் என்று நான் யோசனை கூறுகிறேன்,' என்றதும் கோகிலம் மிக ஆத்திரத்துடனும் கோபத்துடனும்,

'கெட்டுப்போன மாதே! நீ சொல்லும் வார்த்தைகளின் கருத்து விளங்காமற் போகவில்லை. நீதான் கற்பு என்பதற்கே மரியாதை கொடுக்காமல் போனுய். அதனுலேயே உன் வர்க்கத்தார் அதாவது பெண் சமூகமே கெட்டுப் போனது என்று எப்படி நீ முடிவு செய்யலாம். ஜாக்கிரதையாக நடந்துகொள்,' என்று பதில் அளித்தாள். இதைக் கேட்டதும் மங்களத்துக்கும் அதிக கோபம் வந்ததென்றுலும் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன் உதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டே, 'பெண்ணே! அதிக கடுமையான சொற்களை உபயோகிக்க வேண்டாம். இதனுல் நீ என்னுடன் சினேகமாக இருக்க விரும்பவில்லை யென்று நான் நிச்சயித்துக்கொள்ள வேண்டியதுதானே,' என்று கேட்டாள்.

அப்போது கோகிலம் அம்மாதை வெறுப்புடன் உற்றுப்பார்த்து, 'ஓ! இப்போது நீ இங்கிருப்பதாக உத்தேசித்திருந்தால் இங்கிருக்கும் அறைகள் மூன்றில் எந்த அறையில் இருக்கப்போகிறுய் என்பதை முதலில் தீர்மானித்துக்கொள்,' என்று கூறியதும் மங்களம் அசட்டையாக 'நீ வேருெரு அறையில் உட்கார்ந்துகொள்வாய் போலும்! உன்னுடன் இங்கு கட்டாயமாக இருக்கவேண்டுமென்று நான் விரும்பவில்லை. நீயாக எனது கூட்டுறவைத் தேடி வரவேண்டிய காலம் வாரமற் போகாது. அடீ கோகிலம்! நீ தர்மலிங்கம் பிரபுவுக்கு உனது இன்பத்தை அளிக்க மறுக்கும் வரையில் இங்கேயே சிறைப்பட் டிருக்கப்போகிறுய். ஆகவே நீ காலத்தைக் கழிக்கக் கஷ்டப்படும்போது நீயாக என்னைக் கூப்பிடப் போகிறுய்,' என்று சொல்லி முடிப்பதற்குள் கோகிலம் ஆத்திரத்துடன் 'ஒருகாலு மில்லை' என்றுள். உடனே அம்மாது அவளைப் பரிகாசத்துடன் பார்த்துவிட்டு

அறையின் கதவை வெளிப்புறத்தில் பூட்டிக்கொண்டு போய் விட்டாள்.

கோகிலம் அதிக அச்சத்துடன் தர்மலிங்கம் பிரபுவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சுமார் பன்னிரண்டு மணி அடித்தபோது அப்பிரபு வரும் சமயம் நெருங்கிவிட்டபடியால் பொறுக்கமுடியாத அளவு துக்கப்பட்டாள். என்ன செய்வது? எவ்வாறு நடந்துகொள்வது என்று யோசிக்கவும் அவள் மனம் நிம்மதி யடையவில்லை. ஒருசமயம் அவரை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி அவர் ஓடி விடும்படி செய்வது என்று நினைத்தாள். மற்றொரு சமயத்தில் அவர் காலில் விழுந்து தன்னை விடுதலை செய்யும்படி கேட்டுக்கொள்வது என்று நினைத்தாள். வேறொரு சமயம் அவரது இஷ்டப்படி காலக்கிரமத்தில் நடப்பதாக வாக்களித்துவிட்டுச் சகல சௌகரியங்களையும் அடைந்த பின்னர் மெதுவாக ஓடிப்போகலாம் என்று நினைத்தாள். ஆனால் கடைசியில் சொன்ன உபாயத்தை அனுஷ்டிக்க அவளது பரிசுத்த ஹிருதயம் இடங்கொடுக்கவில்லை. மேலும் இப்படிப்பட்ட விஷயங்களில் அதிக அனுபவம் பெற்ற தர்மலிங்கம் பிரபு அதை நம்புவாரா என்றும் நினைத்தாள். இவ்வாறாக அவள் எவ்வித முடிவுக்கும் வாராமல் பலவிதமான யோசனைகளில் மூழ்கி இருக்கும்போதே அவளுடைய அத்துயரத்துக்குக் காரணமான தர்மலிங்கம் பிரபு அவ்வறையில் நுழைந்தான். அப்பிரபு அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவனென்றும் ஆனால் வாலிபனைப்போல் தோன்றுவதற்காகச் செயற்கைத் தோற்றம் செய்துகொள்பவனென்றும் கூறியிருக்கிறோம். அவன் மிகப் பெரிய பணக்காரனாக இருந்ததுடன் பிரபுக்கள் அனைவரையும்விட மிகக் கெட்டவனாகவும் காமாதுரனாகவும் அயோக்கியனாகவும் இருந்தான்.

அவன் தீய வழிகளில் சென்று தேர்ச்சிபெற்று விட்ட படியால் தன் ஆத்திரம் அடங்குவதற்கு அவன் எத்தகைய காரியத்தையும் செய்வான். மிக இழிவான செயலைச் செய்ய வும் பின்வாங்க மாட்டான். அவனுடைய செல்வம் இவ்வா றெல்லாம் அவன் கண்டபடி தாறுமாருகச் செய்யக் கிடைத் தது என்று நினைத்தானே யொழிய அவன் தன்னைப் போன்ற மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கனவி லும் கருதியதில்லை. அவனுக்கு இவ்வளவு செல்வமும் பிர புப்பட்டமும் எப்படிக் கிடைத்தது என்பதுபற்றிச் சொல் லிக்கொண்டிருப்பதில் நாம் காலங்கழிக்க விரும்பவில்லை. எனினும் அவனுக்குப் பணமும் பட்டமும் வந்துவிட்ட பிறகு அவன் தன்னைப்பற்றி உலகத்தார் சொல்வதை அவன் அலட்சியமாகவே நினைக்கலானுள். ஆனுல் ஒரு விஷயம் மட் டும் இங்கு அவசியம் தெரிவிக்கவேண்டும். அதாவது அவன் மனைவியை இழந்தவன். மக்கள் கிடையாது. ஆகவே அவ னது சொத்துக்களுக்கும் பட்டத்துக்கும் வாரிசுதார் இல் லாமல் இருந்தது. அதற்கும் அவன் கவலைப்பட்டதில்லை. தன் பெயர் உலகில் நிலைக்கும்படி செய்வதில் கவனம் செலுத்தவில்லை. அவன் இருந்தது, நினைத்தது, செய் தது எல்லாம் தனக்காகச் செய்யப்பட்டனவாகவே இருந் தன. அவன் சுயநலத்தில் தலை சிறந்தவன் என்று கூறுவது மிகையாகாது.

அப்படிப்பட்ட சுபாவமுடைய தர்மலிங்கம் பிரபு மிக்க டாம்பீகத்துடனும் கர்வத்துடனும் பாவம்! கோகிலம் தனி யாக அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையில் நுழைந்தான். கோகிலம் அப்பிரபுவை நாடகசாலையில் பலமுறை கண்டிருக் கிறுள். அப்போதெல்லாம் அவன் அவளை யணுகித் தன் னைக் காதலிக்கும்படி கேட்டதுண்டு. அச்சமயம் அவள்

அவன் மிக விகாரமானவன் என்று நினைத்தாள். ஆனால் இப்போது அப்பிரபு ஒரு கொடிய ராட்சதன் என்றே நினைத்தாள். கோபத்துடனும் பயத்துடனும் ஒதுக்கித் தள்ள வேண்டிய பிராணி என்றும் கருதினாள். மேலும் அவள் அவனைப்பற்றிக் கெட்ட எண்ண முடையவளாக இருந்தாள். அச்சமயம் அப்பிரபு வேடிக்கையாகவும் நிச்சயமாகவும் பேசுபவன்போல், 'என தன்புள்ள கோகிலம்! நீ என் விஷயத்தில் நல்லெண்ணமுடையவளாக இல்லையென்று எனக்குச் சொல்லப்படுகிறது. அது உண்மைதானா?' என்று கேட்டான். அப்போது அப்பெண், 'எனது பிரபுவே! எனது தாயார் தேக அசௌக்கியத்துடன் இருக்கிறாள். எனது உதவி அவளுக்கு மிக அவசியமாயிருக்கிறது. இச்சமயத்தில் நீங்கள் என்னை அவளைவிட்டுப் பிரித்து விட்டீர்கள். எனது சகோதரனும் என் பிரிவினையால் அதிகம் வருந்துவான். ஆகவே எனக்கு இத்துயரை விளைவித்தவரை நான் நல்லெண்ணத்துடன் எப்படி வரவேற்க முடியும்? அவரைப் பழி வாங்க நினைப்பதும் தவறாகாதல்லவா?' என்று பதில் கூறினாள்.

அவளது பதிலைக் கேட்டுத் திக்பிரமை யடைந்த அப்பிரபு, 'என்ன! பழிவாங்குவதா? காதல் சம்பந்தமான பேச்சைப் பேசுவதற்காக ஏற்பட்ட இந்த வாயினால் நீ பழிவாங்குவதைப்பற்றியும் பேசலாமா? உன் அபிப்பிராயம் அது வாயின் இப்போது இத்துடன் இதை நிறுத்திக் கொள்வோம். இருந்தாலும் நீ ஒருவித முடிவுக்கு வருவதற்காக ஒரு யோசனை கூறுகிறேன். நீ என்னுடையதாகி விடு. உன் தாயாருக்கும் சகோதரனுக்கும் வேண்டிய வசதிகளையெல்லாம் தருகிறேன். உனக்கும் எல்லாவித சௌகரியங்களையும் கொடுத்து வருஷத்துக்கு ஐந்நூறு பவுன் தருகி

றேன். யோசித்துப் பார்' என்று கூறினன். அப்போது கோகிலம் கோபத்துடனும், அகங்காரத்துடனும், 'இப்போது நான் முடிவுகூறி விடுகிறேன். கேளுங்கள். ஐயா! இப்படிப்பட்ட துன்மார்க்கமான வழியில் பணம் சேர்ப்பதைவிட என் தாயாரும் பட்டினியுடன் சாவாள். நானும் பட்டினியால் சாவேன். எனது சகோதரன் பட்டினியால் சாவதை நாங்கள் இருவரும் பார்த்துக் கொண்டிருக்கவும் சகிப்போம்' நான் இங்கு சிறைப்படுத்தப்பட்டவளாயும், எவ்வித சக்தியு மில்லாதவளாயும் இருக்கிறேன் என்பதை நான் அறிவேன். மேலும் நீர் உமது கெட்ட எண்ணத்தைத் தீர்த்துக்கொள்ள எவ்வித தீச்செயலையும் செய்யக் கூடியவர் என்பதையும், உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களும் எதிர் வார்த்தை யொன்றேனும் கூறுமல் உங்கள் இஷ்டம் பூர்த்தியாகும் வகையில் எந்தக் கட்டளையையும் நிறைவேற்றுபவர்கள் என்பதையும் நான் அறிவேன். ஆனுல் எதற்கும் ஒரு முடிவுகாலம் உண்டென்பதை நீங்கள் அறிவது நலம். எனக்கு முன் உங்களிடம் இவ்வாறு அகப்பட்டவர்கள் யாரேனும் ஏதேனும் செய்வதாக அச்சுறுத்தி அவ்வாறு நடத்தையில் காண்பியாமல் இருந்திருக்கலாம். அதற்காகவே இப்போது நான் கூறப்போவதைக் கண்டும் நீங்கள் பரிகாசத்துடன் சிரிக்கலாம். நான் பழிவாங்கப் போகிறேன். என்பது நிச்சயம்' என்று சொல்லிவிட்டுத் திடீரென்று பக்கத்து அறைக்குச் சென்று அதன் கதவைச் சாத்திக்கொண்டாள். இரண்டுமணி நேரம் வரை அவள் அசையவேயில்லை. தர்மலிங்கம் பிரபு போய்விட்டாரு இருக்கிறுரு என்பதையும் அவள் தெரிந்து கொள்ளவில்லை.

இரண்டுமணி நேரத்துக்குப் பின்னர் தான் இருந்த அறையின் கதவு தட்டப்பட்டது. யார் தட்டுவது என்று

விசாரித்ததில் அம்புஜம் என்று தெரிந்து கொண்டாள். அவ் வேலைக்காரி, 'பெண்ணே! உன் ஆகாரத்தைக்கொண்டு வந்து வைத்திருக்கிறேன்!' என்றாள். கோகிலம் அங்கு தர்மலிங்கம் பிரபு இன்னும் இருக்கிறானா என்று விசாரிக்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் வேலைக்காரி பொய் சொன்னால் இவ்வாறு கேட்பதால் என்ன பயன் விளையப் போகிறதென்று நினைத்துக்கொண்டு ஒன்றும் கேட்காமலேயே கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அங்கு வந்து பார்த்ததில் தர்மலிங்கம் பிரபு அவ்விடத்தில் இல்லையென்று தெரிந்து கொண்டதும் தற்காலிகமாகவாவது அவனுடைய தொல்லை தொலைந்ததே என்று சிறிது சந்தோஷப் பட்டாள். ஆனால் இந்த சந்தோஷம் எவ்வளவு நேரம் இருக்கப் போகிறது? அவன் அப்பெண்ணினுடைய யோசனையின்படி நடக்கப் போகிறானா? அவளை எப்படியாவது ஏமாற்றியோ பலாத்காரப்படுத்தியோ தன் வழிக்குக் கொண்டுவரப் போகிறான் என்று அவள் நினைத்தாள். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆகாரத்தில் ஏதேனும் வசிய மருந்து கலக்கப்பட்டிருக்குமோ என்று அஞ்சி உலர்ந்த ரொட்டியையும் சுத்த நீரையும் மட்டும் உட்கொண்டாள். மேஜையின மீது எவ்வளவோ ருசிகரமான பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தும் அவள் அதையெல்லாம் தொடவேயில்லை. அப் பதார்த்தங்களையும் சாப்பிடும்படி அம்புஜம் கேட்டுக்கொண்டும் கோகிலம் ஒன்றும் பேசாமல் தன ஆகாரத்தை முடித்துக்கொண்டு அடுத்த அறைக்கு வந்து விட்டாள்.

அன்று மாலை முழுதும் தர்மலிங்கம் பிரபுவோ அல்லது மங்களமோ அங்கு வாராததால் அவர்கள் ஏதோ மிகக் கேடான செயலில் ஈடுபடத் தயாராகி வருகிறார்கள் என்று கோகிலம் நினைத்து அஞ்சினாள். இனி அவர்கள் இனிமை

யாகப் பேசியோ எதேனும் கொடுப்பதாகக் கூறியோ தன்னுடன் பேசப் போவதில்லையென்றும் பலாத்காரத்தால் தங்கள் காரியத்தை முடித்துக்கொள்ளப் பிரயத்தனப் படுவார்களென்றும் நினைத்தாள். இரவு ஒன்பது மணிக்கு முன்னாள் இரவு கொண்டுவரப்பட்ட ஆகாரம் போன்ற ஆகாரமே கொண்டு வரப்பட்டது. வேலைக்காரி இன்னும் ஏதேனும் தேவையா என்று கேட்டதற்குக் கோகிலம் ஒன்றும் தேவையில்லையென்று சொல்லி விட்டதால் அவள் அவ்விடத்தை விட்டுச் சென்றாள். பிறகு கோகிலம் தனியாக அன்றிரவு ஏதேனும் பலாத்காரம் நடந்தால் அதை எதிர்க்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் தனக்குள் தைரியத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தாள். அவள் அறையின் கதவை உட்பக்கம் தாளிட்டதுடன் கதவின்மீது பெரிய நாற்காலியையும் மேஜையையும் பலமாகச் சார்த்தி வைத்தாள். கையில மெழுகுவர்த்தி விளக்கை யெடுத்துக்கொண்டு அந்த அறையில் யாரேனும் ஒளிந்து கொண்டிருக்கிறார்களா என்று பார்ப்பதுபோல் அறை முழுதையும் சுற்றிப்பார்த்தாள். முன்னாள் இரவு செய்ததுபோலவே எல்லாக் கதவுகளையும் ஜாக்கிரதையாக மூடித்தன் இடத்தைப் பந்தோபஸ்தில் வைத்துக்கொள்டாள். ஆகவே அவள் படுக்கையில் பெட்டியில் பூட்டு போட்டது போன்ற நிலைமையில் ஒருவாறு திருப்தியுடன் அமைந்தாள். எவருக்கும் தெரியாமல் யாரும் எப்படியும் அவ்வறையில் வரமுடியாது என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

இவ்வாறாக அவள் படுக்கை யறையில் ஒரு ஆசனத்தின் மீது உட்கார்ந்து தன் நிலைமையைப்பற்றி யோசித்தபோது மணி பத்து அடித்தது. அவள் என் தாயாரின் நிலைமை என்ன! அவள் இல்லாததால் சகோதரன் சங்கரன் என்ன

186573

கஷ்டப்பட்டிருப்பான்? என்று நினைத்தபோது அவளது கண்களினின்றும் நீர்த்துளிகள் வெளிப்பட்டு கன்னத்தில் விழுந்து முத்துகள்போல் பிரகாசித்தன. தன்னைத்தான் சமாதானப் படுத்திக்கொள்ள எவ்வளவு முயன்றும் அவளால் முடியவில்லை. துக்கமும் கவலையுமே அதிகமாய் இருந்தது. ஆனால் துக்கம் அதிகமாகித் தனக்கும் தெரியாமல் பெருமூச்சுவிட்டு அழுத பின்னர் ஒருவாறு மனநிம்மதி யடைந்தாள். பிறகு ஓய்வெடுப்பதற்காகப் படுக்கலாமா என நினைத்தபோது அதற்கு முன்னாள் இரவு நடந்த சம்பவங்கள் அவளது ஞாபகத்துக்கு வந்தது. ஏதோ ஒருவிதமான பயங்கரம் அவளுக்கு உண்டாயிற்று. படுக்கைக்குச் செல்லவே அவள் அஞ்சினாள். தான் கண்டது கனவாகத்தான் இருக்கலாமென அவள் நினைத்தும் அதைச் சரியாக நம்ப அவளால் முடியவில்லை. ஏதோ பேய்பிசாசே அங்கு உண்மையிலேயே வந்திருக்கவேண்டும் என்று நினைத்தாள். ஆகவே அவளுக்குப் பயம் அதிகமாய் விட்டது. எப்படிப்பட்ட மனோதிடமும் தைரியமும் உடையவர்களுக்கும் இப்படிப்பட்ட சந்தேகமும் அச்சமும் ஏற்படுவது சகஜம். அவர்களுடைய பகுத்தறிவு அவர்களுக்குத் தைரியத்தை ஊட்டிய போதிலும் தங்களுக்கும் தெரியாமலே அச்சப்படுகின்றனர். அதுபோலவே கோகிலமும் அச்சப்பட்டதால் அவளும் படுக்கைக்குச் செல்லத் துணியவில்லை. அந்த அறையில் ஒருபெரிய சாய்வு நாற்காலி இருந்தது. தனக்குப் படுக்கைக்குச் செல்லத் தைரியம் வாராததால் அந்த நாற்காலியிலேனும் சாயலாமென்று நினைத்தாள். ஆகவே அவள் அதை ஒரு பக்கமாகப் போட்டுக்கொண்டு கதவு, படுக்கை, மற்ற சாமான்கள் எல்லாம் தனக்குத் தெரியும்படி சாய்ந்துகொண்டாள். ஐயோ பாவம்! உலக அனுபவம் சிறிதுமில்லாத

கள்ளங் கபடமற்ற அப்பெண், தர்மலிங்கம் பிரபு தனக்கும் தெரியாமல் அவ்வறையில் நுழைந்துவிடக் கூடாது என்னும் எண்ணம் ஒரு புறம்; முன்னாள் இரவு தோன்றிய வெளுத்த முகத்தோடுகூடிய பேய் மீண்டும் தோன்றலாகாது என்னும் எண்ணம் ஒரு புறம்; ஆக அவள் இவ்விருவகையால் அஞ்சினாள்.

அவள் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தாள். மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்தி விளக்கினால் அவ்வறை முழுவதிலும் வெளிச்சம் தோன்றியதால் எல்லாச் சாமான்களும் மூலை முடுக்குகளும் அவளது கண்ணுக்கு நன்றாகத் தெரிந்தது. இவ்வித நிலைமையில் அவள் பலவற்றைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது மணி பதினொன்றும் அடித்துவிட்டது. அப்போது அவளுக்கு ஒருவாறு உறக்கம் ஏற்பட்டது. ஒரு மணி நேரம்தான் தூங்கினாள். மணி பன்னிரண்டு அடிக்கும்போது அவள் மெதுவாக விழித்துக்கொண்டாள். ஆனால் முன்னாள் இரவுபோல் அச்சத்துடனே திடீரென்றே விழித்துக்கொள்ளவில்லை. அவள் விழித்தபோது இரண்டொரு நிமிஷம்வரை தான் எங்கிருப்பது என்பதே அவளுக்குத் தெரியவில்லை. பிறகு அவள் நன்றாகக் கண்களைத் திறந்து பார்த்தபோது எதிரிலிருந்த விளக்கு உபாயமாக எரிந்துகொண்டிருந்தது. அந்த இரவு அதிக மப்பு மந்தாரமுமாய் இருந்தபடியாலும், விளக்கும் உபாயமாக எரிந்தபடியாலும் அந்த அறை அவ்வளவு பிரகாசமுள்ளதாக இருக்கவில்லை. மெதுவாக அவளது உள்ளத்தில் ஒருவித அச்சம் தோன்றியது. ஏன்? அந்த அறையின் ஜன்னலுக்குப் போடப்பட்டிருந்த திரையின் பின் யாரோ ஒரு உருவம் வந்து நின்றதுபோல் தோன்றியது. அவ்வாறு தோன்றியது உண்மைதானா? என்று நிச்சயித்

துக் கொள்வதற்காகத் தன் கண்களைக் கையால் தேய்த்துக் கொண்டு பார்த்தபோது அவ்வுருவம் அசைவதுபோல் தோன்றியது. அதுமட்டுமா? அவ்வுருவம் சமீபத்திலும் வந்தது. சிறிது தைரியம் செய்துகொண்டு பார்த்ததில் முன்னாள் இரவு காணப்பட்ட உருவமே அது என்று கண்டு அவள் நடுக்கங்கொண்டாள்.

உடனே அவள் ஓவென்று கூக்குரலிட முயன்றாள். ஆனால் அவள் வா எழவில்லை. அவளது அங்கங்களெல்லாம் சோர்ந்துவிட்டன. மயக்கம் வந்தவள்போல் காணப்பட்டாள். ஆனால் அவளது கண்கள்மட்டும் நன்றாகத் தெரிந்தது. மனமும் நடப்பதை உணர்ந்தது. அந்த உருவம் தனக்குச் சமீபத்தில் வருவதை அறிந்தாள். அது உயரமாகவும் பயங்கரமானதாகவும் இருந்தது. தன் தேகம் முழுதையும் கரிய ஆடையால் மூடிக்கொண் டிருந்தது. அதன் முகமோ பிரேதத்தின் முகம்போலவே வெளுத்துப் போயிருந்தது. அவ்வுருவம் அவளை உற்று நோக்கியது. அவ்வுருவம் கோகிலத்தினிடம் போய் நின்றது. அது தன் கையைத் தூக்குவது போலவும், வாயை அசைப்பது போலவும் தோன்றியது. அப்போது அப்பெண் அச்சத்தால் மதி மயங்கி மயக்க மடைந்தாள். அவள் சொற்ப நேரத்துக்குப் பின் ஸ்மரணை யடைந்து பார்த்தபோது பழைபபடி விளக்கு உபாயமாக எரிந்துகொண் டிருந்தது. எதிரில் யாரும் இருக்கவில்லை. எந்த உருவமும் காணப்படவில்லை. கோகிலம் தனியாக இருந்தாள். எனினும் சொற்ப நேரம்வரை அவளால் அசையவும் முடியவில்லை. பிறகு எழுந்தபோது தன் உள்ளத்தில் திடீரென்று தோன்றிய உணர்ச்சிக் கிணங்க, அவள் தான் காப்பாற்றப்பட்டதற்காக மண்டியிட்டுக் கடவுளைப் பிரார்த்தித்தாள். இவ்வாறு பிரார்த்தித்ததால் அவள் நம்பிக்கையும்

தைரியமும் அடையவே விளக்கைத் தூண்டிவிட்டு அது இன்னும் பிரகாசமாக எரியும்படி செய்தாள். தான் யாருக்கும் எத்தகைய தீமையையும் செய்யாததாலும், தன் மனம் பரிசுத்தமாய் இருப்பதாலும் தனக்கு எவ்விதத் தீமையையும் செய்யாதென்றும் நம்பினுள். ஆகவே அவள் மெழுகுவர்த்தி விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு அவ்வறை முழுதையும் சுற்றிப் பார்த்தாள். எல்லாம் அதனதன் இடத்தில் அப்படியப்படியே இருந்தன. பிறகு அவள் ஆசனத்தில் உட்கார்ந்து நிதானமாகச் சிந்தித்தாள். தான் கண்டது கனவல்ல என்று நிச்சயித்தாள். தன் கண்கள் நன்ருகத் திறந்திருக்கத் தான் அவ்வுருவத்தைக் கண்டது உண்மை என்று தெளிந்தாள். எனினும் அவளுக்குத் தோன்றிய உருவம் இறந்துபோன ஆத்மாவின் தோற்றமா அல்லது உயிருள்ள மனிதர் தோற்றமா? என்று சந்தேகித்தாள். இரண்டையும் நம்ப அவளால் முடியவில்லை. தர்மலிங்கம் பிரபுதான் ஏதேனும் சூழ்ச்சி செய்திருப்பானே என்று நினைத்தாள். ஆகவே எப்படி யோசித்தும் தான்கண்ட தோற்றத்தின் விவரம் தெரிந்துகொள்ள அவளால் முடியவில்லை. இவ்வாறு சிந்தித்துக்கொண்டே சாய்வு நாற்காலியில் படுத்தவண்ணம் அவள் தூங்கிவிட்டாள்.

பின்னர் அவள் விழித்துக்கொண்டு பார்த்தபோது சூரியோதயம் ஆகியிருந்தது. எனினும் அவள் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவண்ணமே இரவு ஏற்பட்ட சம்பவத்தைப்பற்றிச் சிந்தித்தாள். கனவல்ல என்று நிச்சயமாகத் தெரிந்தாலும் அத்தகைய உருவம் தோன்றியதன் காரணம் அவளுக்கு விளங்கவில்லை. நல்ல விதமாக இரண்டு இரவுகளிலும் தூங்காததால் அவள் தேகம் ஒருமாதிரி இருந்தது; உற்சாகம் இருக்கவில்லை. இவ்வாறு இன்னும் இரண்டு

மூன்று இரவுகள் கழித்தால் ஜுரம் வந்து விடுமென்று நிச்சயமாக நினைத்தாள். எனினும் அவள் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு அதே அறையைச் சேர்ந்த மற்றும் இரு அறைகளுக்குச் சென்று பார்த்தாள். எல்லாம் அவள் வைத்த படியே இருந்தன. அவள் கதவுக்குச் சார்த்தி வைத்திருந்த நாற்காலியையும் மேஜையையும் அப்புறப்படுத்தியதும் அம்புஜமும் காலை ஆகாரத்துடன் வந்து சேர்ந்தாள். தேயிலைப் பானத்தை மட்டும் எப்போதும் கோகிலம் ஆவலுடன் உட்கொள்வாள். மற்றபடி உணவுகள் அவளுக்குத் தேவை இருக்கவில்லை. அவள் தேயிலைப்பானம் அருந்தியதும் ஜன்னல் கதவைத் திறந்து சிறிது காற்று வாங்கினாள். தோட்டத்தில் புஷ்பச் செடிகளின் மத்தியில் உலாவ வேண்டுமென்னும் ஆசை அவளுக்கு உண்டாயிற்று. அதை அம்புஜத்திடம் தெரிவிக்கலாமென்று அவள் நினைத்தாள். ஆயினும் அவ்வாறு சொன்னால் அவள் சிறிது சிறிதாக வழிக்கு வருவதாக அம்புஜமும் மற்றவர்களும் நினைத்துவிடுவார்கள் என்னும் பயத்துடன் கேட்பதை நிறுத்திக்கொண்டாள். ஆயினும் அக்கட்டடத்தின் பின்புறமெல்லாம் எப்படியிருக்கிறதென்று தெரிந்துகொண்டால் தான் தப்பித்துச் செல்வதற்குச் சௌகரியமாயிருக்குமே என்னும் எண்ணத்துடன் அவ் வேலைக்காரியைப் பார்த்து, 'நான் சென்ற இரண்டு இரவுகளாகச் சரியாகத் தூங்காததால் உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. நல்ல காற்றும் உலாவுதலும் அவசியமாக இருக்கிறது. நான் விரும்பினால் அத்தோட்டத்திலும் போய் உலாவலாம் என்று மங்களம் என்னும் மாது கூறியிருக்கிறாள்' என்றாள்.

அதற்கு அவ்வேலைக்காரி, 'ஆம்; போகலாம். ஆனால் மங்களம் உன்னுடன் துணையாக இருக்கவேண்டுமே' என்று

தெரிவித்ததும் கோகிலம், 'அப்படியே ஆகட்டும்' என்றாள். மங்களம் என்னும் மாது உலகத்திலேயே வெறுக்கத் தக்க பிராணியாயிருந்தும் அவளுடன் செல்ல ஒப்புக்கொண்டதன் நோக்கம் எப்படியாவது கட்டடத்தின் பின்புறத்தைப் பார்க்கவேண்டு மென்பதே: வேலைக்காரி அம்புஜமும் கோகிலத்தைத் தன்னுடன் மாளிகையிலிருந்து கீழ்கட்டுக்கு அழைத்துச் சென்றாள். வழியில் ஒரு அறையிலிருந்த மங்களத்துக்குக் கோகிலத்தின் விருப்பம் தெரிவிக்கப்பட்டதும் மங்களம் அவளைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றாள். அவ்வாறு செல்லும் வழியில், மங்களம் கோகிலத்தைப் பார்த்து, 'பெண்ணே! நீ ஏதோ தேக அசௌக்கியத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. உன் முகம் வெளுத்திருக்கிறது' என்று கேட்டாள். அதற்குக் கோகிலம், 'நான் சந்தோஷத்துடனே திருப்தியுடனே இருப்பதற்கு என்ன காரணமிருக்கிறது. மேலும் சென்ற இரண்டு இரவுகளில் எனக்குச் சரியான தூக்கமில்லை' என்று சொல்லி முடிப்பதற்குள் மங்களம், 'இரவில் ஏதும் சத்தம் உண்டாக வில்லையே. ஆச்சர்யமாகவோ அசம்பாவிதமாகவோ நீ ஏதேனும் கண்டாயா?' என்று கேட்டாள். அவள் கேட்ட தோரணையிலேயே ஏதோ விசேஷ மிருக்க வேண்டுமென்று நினைத்துக் கோகிலம் அவள் முகத்தை உற்றுப்பார்த்த வண்ணம், 'ஆம். இரண்டு இரவுகளிலும் மிகச் சங்கடப் பட்டேன்' என்று கூறியதும் மங்களம், 'அப்படியா? எவ்வகையில் சங்கடப் பட்டாய்' என்று கேட்டாள்.

அப்போது கோகிலம், 'எனக்குத் தொந்தரை விளைவிக்கக்கூடியது ஏதேனும் இந்த வீட்டில் இருந்தால் அது உனக்குத் தெரியாமலிருக்குமா!' என்று விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் உத்தேசத்துடன் கேட்டாள். அச்சமயம் மங்

களம் ஆச்சர்யமும் சந்தேகமும் அடைந்தவள்போல் கோகி லத்தைப் பார்த்தாளே யொழிய உடனே பதில் சொல்ல வில்லை. தோட்டத்தின் கோடிக்குப் போகும் வரையில் அவர்கள் இருவரும் பேசாமல் மௌனமாக நடந்தார்கள். பிறகு திரும்பி வருகையில் மங்களம், 'அந்த அறைகளில் ஒரு விபரீதமான சத்தத்தை நீ கேட்டிருக்கலாம். ஆனால் நான் அதை இதுவரை கேட்டதில்லை' என்றாள். அப்போது கோகி லம் ஒன்றும் பேசவில்லை. ஏனெனின், உண்மையிலேயே அவளுக்குத் தோன்றிய உருவம் மனித உருவமாக இருக்கு மாயின் அது எப்படி உள்ளே வந்ததோ அதே வழியில் தான் வெளியே போய் விடலாமாதலால் அந்த உண்மை யைச் சாவகாசமாகக் கண்டு பிடிக்கலாம் என்னும் எண்ணத் துடன்தான். மேலும் அவள் மங்களத்தினின்றும் விஷயங் களைக் கிரகிக்க விரும்பினாளே யொழியத் தான் எதையும் சொல்லிக்கொள்ள விருப்பவில்லை.

கோகிலம் மங்களம் என்னும் அம்மாதினுடன் நடந்து கொண்டே அக்கட்டடத்தின் பின்புறங்களை யெல்லாம் நன் ருகப் பார்த்துக்கொண்டு வந்தாள். உயரமான சுவர்கள் இருக்கின்றன. அச் சுவர்களில் இருக்கும் ஜன்னல்களுக்கும் இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. வேறு வழியே கிடையாது. ஆகவே கோகிலம் தன் அறையைவிட்டு எப் படியாவது தோட்டத்துக்குள் வந்தாலும் அதுவும் மற்றொரு சிறைடாகத்தான் இருக்கும் என்னும் முடிவுக்கு வரவேண் டியதாயிற்று. சொற்பநேரம் இருவரும் மௌனமாக இருந்த பின்னர் மங்களம் கோகிலத்தினிடம், 'நீ கேட்டதாகக் கூறும் அபூர்வ சத்தத்தின் தன்மை இன்னதென்று விளக்கவில் லையே. அதைச் சொல்' என்று கேட்டாள். அதற்குக் கோகிலம், 'ஓ, அப்படியானால் அத்தகைய அபூர்வ சத்தம்

கேட்பதற்கு நியாயமிருக்கிறது என்று நீ நினைக்கிருய் போலும்' என்ருள். அப்போது அம்மாது, 'நீ ஏதோ சத்தம் கேட்டேன் என்று சொன்னதால் நான் நம்பவேண்டியதாகத்தானே இருக்கிறது. இன்று இரவு ஏதேனும் ஆச்சர்யம் சம்பவித்தால் நீ அதை எனக்குத் தெரியப்படுத்து. இப்போது நாம் நமது பேச்சை வேறுவகையில் திருப்புவோம். நீ இவ்வாறு பிடிவாதமாக இருப்பதில் சலிப்படையவில்லையா? இப்போது சலிப்படையவில்லை யென்ருலும் கூடியவிரைவில் நீயே சலிப்படைந்து வழிக்கு வருவாய் என்பதைமட்டும் நம்பு' என்றதும் கோகிலம், 'மாதே! நமது சம்பாஷணையை இப்படிப்பட்ட வகையில் திருப்புவதைவிட எதையும் பேசாமலே இருப்போம். நான் இதுவரை நடந்ததுபோதும். எனது அறைக்குத் திரும்பி விடுகிறேன்' என்ருள்.

அதற்கு மங்களம், 'அப்படியானல் உன் இஷ்டப்படியே செய்வோம்' என்று கூறிக்கொண்டே அவளை அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் கொண்டு போய்விட்டுத் தான் வெளியே போய்விட்டாள். கோகிலம் பழையபடி அவ்வறையில் தனியே இருந்ததால் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு தனக்கும் மங்களத்துக்குமிடையில் நடந்த சம்பாஷணையைப்பற்றிச் சிந்தித்தாள். சமுத்திர விலாச மாளிகை என்னும் அக்கட்டடத்திலேயே ஏதோ மர்மமிருக்கவேண்டுமென்று நிச்சயமாக நம்பினள். மங்களம் ஏதோ சத்தம் என்று சொன்னளே அது இன்னதென்று அவளுக்குத் தெரியவில்லை. ஒருகால் அந்த வீட்டில் பேய் பிசாசுகள் இருக்கிறதோ என்று பயந்தாள். மேலும் தன்னைப்போல மற்றும் யாரேனும் கைதியாக இருந்து அவர்கள் சத்தம் செய்தார்களோ என்றும் சந்தேகித்தாள். எனினும்

அந்த ஆசாமி எப்படி அந்த அறையில் வரமுடியும் என்பது தான் தெரியவில்லை. அதுதான் பெரிய மர்மமாக இருந்தது. அன்று முழுதும் தர்மலிங்கம் பிரபுவையும் பார்க்கவில்லை. அவனைப்பற்றிய தகவலும் தெரியவில்லை. முறைப்படி அம்புஜம் அவளுக்கு ஆகாரம் கொண்டுவந்தாள். இரவு சுமார் ஒன்பது மணிக்கும் அவ்வாறே ஆகாரம் கொண்டுவரப்பட்டது. வழக்கப்படி கோகிலம் அறைகளையெல்லாம் ஜாக்கிரதையாக மூடிக்கொண்டும், தனக்கு வேண்டிய பந்தோபஸ்துகளை ஏற்படுத்திக்கொண்டும் ஓய்வு பெறுவதற்காகப் போனபோது அவள் படுத்துக்கொள்ள விரும்பவில்லை. சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு என்ன நடக்கிறதென்பதைத் தூங்காமல் கவனிக்க வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுக்கும் தெரியாமல் தூக்கம் வருவதுபோல் இருந்தது. ஆகவே அவள் எழுந்து மேலும் கீழுமாக நடக்க ஆரம்பித்தாள். உடனே மெழுகுவர்த்தி விளக்கை ஏற்றி வைத்தாள். காலம் கடக்கும்போதெல்லாம் அவளுக்கு அச்சமும் ஆர்வமும் அதிகரித்தது.

சுமார் மணி பன்னிரண்டு இருக்கும். அச் சமயத்தில் யாரோ ஒரு மனிதர் அழுவதுபோன்ற சத்தம் அவளுக்குக் கேட்டது. அதைக் கோகிலம் உற்றுக் கவனித்தாள். அந்த அழுகை பெரும் சத்தத்துடன் இல்லாவிட்டாலும் பிறருக்கு நன்ருகத் தெரியும்படி இருந்தது. சொற்ப நேரத்துக்கெல்லாம் அழுகை ஓவென்று பயங்கரத்துடன் கூச்சலிடுவது போல் மாறியது. அதைக் கேட்டதும் கோகிலமும் பீதியடைந்தாள். அக்கட்டடமே இடிந்து விழுந்து விடுவதுபோல் அவ்வளவு உரத்த சத்தத்தில் அக்கூச்சல் கிளம்பியது. சிறிது நேரம் கழிந்ததும் சத்தமெல்லாம் அடங்கிவிட்டது. நிசப்தமாக இருந்தது. கோகிலம் மட்டும் அச்சத்துடன் மெய்

நடுங்க சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அவளது ஹிருதயம் துடித்துக்கொண் டிருந்தது. அடிக்கடி திடுக்கிட்டாள். பிறகு அவள் தன்னைத்தான் தேற்றிக்கொண்டு ஒருவாறு நிம்மதியாக உட்கார்ந்துகொண்டாள். அப்போது அவள் தன் நிலைமைக்காகப் பயப்படுவதுபோய், தான் யாருடைய அழுகுரலைக் கேட்டாளோ அந்த ஆசாமியினிடம் அனுதாப மடைந்தாள். அவ்வளவு பெரிய பயங்கா முடையதாகவே இருந்தது. அவள் நாற்காலியில் சாய்ந்திருந்த போது, தான்கேட்ட சத்தம் மங்களம் குறிப்பிட்டதாகவே இருக்குமோ என்று யோசித்தாள். இவ்வாறு அவள் பயப்பட்டதால் அந்தப் பயமே அவளுக்குத் தூக்கத்தைக் கொடுத்துவிட்டது. ஆனால் அதை நல்ல தூக்கம் என்று சொல்லமுடியாது. எதிரில் நடப்பவைகளை யெல்லாம் தெரிந்துகொண்டும் ஆனால் அதில் கலந்துகொள்ள முடியாத நிலைமைபோல் ஏற்படும் உபாய நித்திரையாகவே அது இருந்தது. ஆனால் திடீரென்று அவள் விழித்துக்கொண்டாள். விழித்தெழுந்து பார்த்தபோது அறையில் ஒரு மனிதர் இருப்பதைக் கண்டாள். ஆனால் சென்ற இரவுகளில் கண்ட விசித்திர ரூபமாக அது இருக்கவில்லை. தர்மலிங்கம் பிரபுவே இம்முறை அவ்வறையில் வந்திருந்தான்.

அவனைக் கண்டதும் கோகிலம், 'அயோக்கியா!' என்று கூறிக்கொண்டே அவன் அங்கு எப்படி வந்தான் என்பதை அறிவதற்காக நாற்புறங்களிலும் பார்த்தாள். எல்லாக் கதவுகளும் மூடப்பட் டிருக்கின்றன. ஆகவே அவன் தான் நின்றிருக்கும் அந்தப் பூமியினின்றும்தான் அவன் கிளம்பியிருக்கவேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. அப்பிரபு, 'என் மனதைக் கொள்ளைகொண்ட பெண்ணே! இவ்வாறு ஆத்திரப்படவேண்டாம். இதனால் உனக்கு ஒன்றும்

நன்மை கிடைக்காது. பற்பல விதமான சௌகரியங்களையும் நான் தருவதாக வாக்களித்தும் நீ அவற்றைப் புறக்கணிப்ப தென்றால் உன்னை முட்டாள் என்றுதான் நினைக்கவேண்டி யிருக்கிறது. எனினும் நான் உனக்கு வாக்களித்தையெல் லாம் உனக்குக் கொடுக்கத்தான் போகிறேன்,' என்றான். அதற்கு அவள், 'பிரபுவே! நீர் பெரிய அயோக்கியனாக இருக்கிறீர். நான் ஒருகாலும் உமது வழிக்கு வரவேமாட் டேன்' என்றாள். பிரபு கோகிலத்தைப் பார்த்து, 'பெண்ணே! ஆத்திரப்படாதே. நீ என் கையில் சிக்கிக் கொண்டிருக் கிறாய் என்பது உன் ஞாபகத்தில் இருக்கட்டும். உட்காரு. நிதானமாகச் சம்பாஷிப்போம்' என்று பொறுமையுடன் மிக வும் நல்லவன்போலப் பேசினான். அப்போது அவள் தன் னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஏதேனும் ஆயுதத் தைத் தேடுவதுபோல் நாற்புறங்களிலும் சுற்றிப் பார்த்துக் கொண்டே, 'பிரபு! நீர் உடனே இந்த அறையைவிட்டு வெளியே போகவேண்டும். அப்படிப் போகாமல் பலாத் காரத்தை உபயோகப்படுத்தினாலும் சரியே; நானும் ஒரு கை பார்த்துவிடுவேன். நமது போராட்டம் பலமாகவே இருக்கும்,' என்றாள். அப்போது பிரபுவுக்கு ஆத்திரம் அதி கரித்ததுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்ததால் அவ ளைக் கட்டி யணைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆவலும் அதிகரித்து விட்டபடியால் அவன் ஒரே பாய்ச்சலாக அவள் மீது பாய்ந்து அவளைத் தன் கரத்தில் அணைத்துக்கொண்டு, 'போராட்டம் ஏற்பட்டால் நீ எனக்கு உட்படவேண்டியது தான்' என்று கூறினான்.

அச்சமயத்தில் யாரோ ஒரு மூன்றாவது பேர்வழி அங்கு தோன்றினான். அந்த ஆசாமி மிக்க விரைவில், எதிர்பாராத வகையில் திடீரென்று தோன்றியதாலும், கோகிலம் திக்

பிரமை யடைந்திருந்ததாலும் அந்த ஆசாமி எங்கிருந்து, எப்படி வர நேர்ந்தது என்பதை அவள் அறியவில்லை. ஆனால் அந்த ஆசாமியைப் பார்த்ததும் தான் இரண்டு தினங்களாக இரவில் கண்ட உருவமே அது என்று நிச்சயித்தாள். வெளுத்த முகத்துடன் தேகம் முழுதையும் கருப்புத் துணியால் போர்த்திக்கொண் டிருந்தது. ஆனால் இம்முறை அவ்வுருவம் அதிக பயங்கரத்துடனும் கோர ரூபத்துடனும் காணப்பட்டது. அந்த உருவம், 'அடே, ராட்சஸா!' என்று சொன்ன சொல் அப் பெண்ணின் காதில் கேட்டது. உடனே தர்மலிங்கம் பிரபுவும் தன் பிடியிலிருந்த பெண்ணை விட்டுவிட்டு அவ்வுருவத்தைப் பார்த்தான். அப்போது அந்த உருவம் பிரபுவின் தலையில் ஓங்கி ஒரு அறை கொடுத்தது. உடனே பிரபுவும் ஸ்மரணையற்று பூமியில் விழுந்தான். உடனே அந்த உருவம் பேயுமல்ல, பிசாசுமல்ல என்பதற்கறிகுறியாகக் கோகிலத்தின் கையைப் பிடித்து, 'இந்த வழி, இந்த வழி' என்று கூறியது. பிறகு இருவருமாகப் படுக்கையின் கீழ் சுவற்றில் இருந்த வாசலின் வழியாக வெளியேறிவிட்டனர். ஆனால் அந்தப் பெரிய மாளிகையின் பல இடங்களையும் கடந்துதானே வெளிவரவேண்டும். அதற்குரிய வசதிகள் இருக்கவில்லை. மேலும் சொற்பநோத்துக் கெல்லாம் பலர் அவர்களைப் பின்தொடர்ந்து வருவதுபோல் அனேகருடைய காலடிச் சத்தங் கேட்டது. 'அவர்களைப் பிடி, அவர்களைப் பிடி' என்று பின்னால் ஓடி வருபவர்கள் கூச்சலிட்டதும் அவர்களிருவருக்கும் கேட்டது. சில நிமிஷங்களுக்குள் வீரபாலய்யா, அம்புஜம், மங்களம், மற்றும் இரு வேலைக்காரர்கள் ஆக ஐந்து பேருமாக வேறு வழியே எதிரில்வந்து கோகிலத்தையும் அவளை அழைத்துச் சென்ற மனிதரையும் வழி மறித்தார்கள்.

வீரபாலய்யா, அந்தப் புதிய மனிதன் தலைமீது ஓங்கி ஒரு அறை அறையவே அவன் பேச்சு மூச்சில்லாமல் கீழே விழுந்தான். கோகிலம் 'ஐயோ' என்று கத்தினாள். உடனே மூர்ச்சையாய் அப்பெண்களின்மீது சாய்ந்தாள். சற்று நேரத்துக்குப் பின்னர் கோகிலம் ஸ்மரணை பெற்று விழித்துப் பார்த்தபோது தான் மீண்டும் முன்பு வைக்கப்பட்ட அதே அறையில் ஒரு படுக்கையில் படுக்க வைத்திருப்பதைக் கண்டாள். தப்பிப் போய்விட முயற்சித்தும் முடியாமற் போய்விட்டது பாவம்! அவள் மனோபாவத்தை எப்படி வருணிப்பது?

38-வது அத்தியாயம்

கிரகப் பிரவேச விருந்து

நாகலாபுரம் ஜமீன்தாரும் அவரது மனைவியும் இரத்தினபுரியில் அரசர் மாளிகைக்குச் சமீபத்தில் அம்மாளிகையுடன் போட்டி போட்டவகையில் அதிக திரவியம் செலவழித்து அழகான மாளிகையொன்றை நிர்மாணித்துக்கொண்டனர். அங்கு கிரகப் பிரவேசம் செய்த தினத்தன்று அவர்கள் அந்நகரிலுள்ள பிரபலஸ்தர்களையெல்லாம் விருந்துக்கு அழைத்திருந்தனர். அவ்விருந்தின்போது அவர்கள் வழக்கப்படி நடனமும் வைக்கப்பட்டது. அந்த ஜமீன்தார் சுமார் அறுபத்துநான்கு வயதானவராய் இருந்ததுடன் அந்த ராஜ்யத்தைச் சேர்ந்த பழங்குடியைச் சேர்ந்தவர் என்னும் பெருமையையும் உடையவர். ஆகையால் அவர், தம் வம்சத்தைச் சேர்ந்த பெரியார்களின் படங்களையெல்லாம் அப்புதிய மாளிகையின் ஹாலில் தொங்கவிட்

டிருந்தார். அவர் சாதாரணமாகச் செல்வர்களைப்போல் குறுகிய நோக்கமுடையவர். தாராள புத்தியோ தர்ம குணமோ கிடையாது. எல்லாம் பெருமைக்காகவும் டாம்பீகத்துக்காகவுமே செய்வார். அவர் பார்வைக்கு நல்ல தோற்றமுடையவரல்ல. மிகவும் குள்ளமாக இருப்பார். ஆதலால் சாதாரணமாக அவருடைய சேவகன் நல்ல உடையை அணிந்து அவர் அருகில் நின்றால் புதிதாகப் பார்ப்பவர்கள் அச் சேவகன்தான் பிரபு என்று நினைப்பர். அப்பிரபுவின் மனைவியோ அவரைவிட இருபது வயது இளையவள். உயரமாகவும், பார்வைக்குக் கம்பீரத் தோற்றமுடையவளாகவும், சுமார் நாற்பத்து நான்கு வயதானவளாயும் இருந்தாள். ஆயினும் அவளும் வீண் கர்வம் படைத்தவளாயும், குறுகிய மனப்பான்மையை யுடையவளாயும், அற்ப விஷயங்களில் கவனம் செலுத்துபவளாயும் இருந்தாள். அத் தம்பதிகளுக்குப் பதினாறு வயது முதல் இருபத்தாறு வயதுவரைப்பட்ட ஆறு மக்கள் இருந்தனர். அவர்களில் மூவர் ஆண்கள், மூவர் பெண்கள். ஆண்களில் மூத்தவன் அந்த ராஜாங்கத்தின் சட்டசபையில் ஒரு மெம்பராக இருந்தான். இரண்டாவது மூன்றாவது பிள்ளைகள் சர்வ கலாசாலைப்பட்டம் பெற்றுவிட்டுச் சர்க்கார் உத்தியோகங்களுக்காக அலைந்துகொண்டிருந்தனர். மூன்று பெண்களும் தக்க வயதை அடைந்து விட்டபடியால் சகோதரர்கள் உத்தியோகத்துக்கு அலைந்தது போல அவர்கள் கணவன்மாருக்காக அலைந்துகொண்டிருந்தனர். மூன்று பெண்களுமே தங்கள் தாயாரைப்போன்ற குணங்களை யுடையவர்கள். அக்குடும்பத்தைப்பற்றி இப்போது இவ்வளவு சொன்னால் போதும்.

அப்புதிய மாளிகை நாகலாபுரம் ஜமீன்தாருடையதாகையால் அதற்கு 'நாகலாபுரம் ஹவுஸ்' எனப் பெயரிட்டிருந்த

னர். அந்த மாளிகையில்தான் கிரகப் பிரவேச விருந்து நடந்தது. அந்த விருந்து ஒரு மாத மிருக்கும்போதே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. பிரபலஸ்தர்களும் அடிக்கடி தங்கள் சம்பாஷணையினிடையே இந்த விருந்தைப்பற்றிப் பிரஸ்தாபிப்பார்கள். பலர் அந்த விருந்தின்போது ஒருவரை யொருவர் சந்திப்பதென்று எழுதிக் கொண்டனர். பல கள்ளக் காதலர்களும் அங்கு வேறு வேஷத்துடன்கூடி நடனமாடிக் களிப்பதென்று பேசிக் கொண்டனர். ஆண்களும் பெண்களுமாகச் சுமார் ஆயிரம் பேருக்கு அழைப்புகள் அனுப்பப்பட் டிருந்தன. அந்த ஆயிரம் பேரும் அக்கட்டடத்தின் சொந்தக்காரர்களுக்குத் தெரிந்தவர்களென்பது அர்த்தமல்ல. அப்புதிய மாளிகை ஆயிரம் பேருக்கும் இடந் தரக்கூடியது என்பதை உலகத்துக்கு அறிவிக்கவே அத்தனை பேரும் அழைக்கப்பட்டனர். விருந்தினர்களை மரியாதையுடன் வரவேற்பதற்காகப் பல சேவகர்கள் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு நின்றனர். மாளிகை தோரணங்களாலும், மின்சார விளக்குகளாலும் திவ்யமாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. வந்த விருந்தினர்களைப்பற்றிக் கூறவேண்டியதே யில்லை. ஒவ்வொருவரும் தாங்கள்தான் உலகத்துக்கே நவீன முறைகளைக் கற்பிப்பவர் போல் நூதன ஆடை ஆபரணங்களை யெல்லாம் அணிந்து வந்தவர். இப்போதும் நமது சமூகத்தினிடையேயும் சாதாரண மக்களும் எங்கேனும் விருந்து அல்லது விசேஷம் நடக்கிறதென்றால் அதற்குப் போகும்போது இரவல் வாங்கியாவது ஆண்களும் பெண்களும் தங்கள் நிலை உண்மைமைக்கு மீறியும் உடைகளையும் நகைகளையும் அணிந்து செல்கிறார்களென்றால் பணக்காரர்களும் பிரபு குலத்தைச் சேர்ந்தவர்களும் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை யணிவதில்

போட்டி போடுவதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது? எவ்வளவு நாகரிக முடையவர்கள்போல் விருந்ினர்கள் வந்தாலும் அதைவிட அதிக நாகரிகமுறையில் அவர்களை வரவேற்கத்தக்க சாதனங்கள் அப்புதிய மாளிகையில் அமைக்கப்பட்டிருந்தன.

கிரகப் பிரவேச தினத்தன்று இரவு சரியாகப் பதினெரு மணிக்கெல்லாம் விருந்துக்கு வரவேண்டியவர்களெல்லாம் வந்து சேர்ந்துவிட்டார்கள். கட்டடம் மிகப் பெரிதாக இருந்ததாலும் பெரிய அறைகள் பல இருந்ததாலும் அவரவர்களும் கூட்டங் கூட்டமாகக் கூடிப் பேசிக்கொண் டிருந்தனர். வேளைக்கு முன்னதாக வந்தவர்களில் இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் மற்றொருவனை விட உயரமாகவும், பாஞ்சால தேசத்தின் குதிரை வீரரைப் போல் உடை அணிந்துகொண்டும் இருந்தான். மற்றொருவன் இரத்தினபுரியிலேயே மிக்க செல்வர்கள் அணியும் முறையில் ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டிருந்தான். முதல் மனிதன் கரிய முகமூடியால் தன் முகத்தை மூடிக் கொண்டிருந்தான். மற்றவனும் வேறொருவிதமாக முகமூடியணிந்திருந்தான். சாதாரணமாக விருந்துக்குப்பின் நடனம் நடக்குமிடத்துக்கு வருபவர்களெல்லாம் நடனம் செய்யும் ஆடவர் மாதர் ஒருவரை யொருவர் இன்னாரென்று தெரியாம லிருக்கும்பொருட்டு இவ்வாறு முகமூடியை யணிந்து வருவது வழக்கம். முதலில் குறிப்பிட்ட ஆள் சந்திரசேகரம் பிரபு. இரண்டாவது குறிப்பிட்ட ஆள் அவனுடைய நண்பனாகிய தினகரம் பிரபு. அவர்கள் இருவரும் யாருமில்லாத ஒரு இடத்தில் தனியாக இருந்துகொண்டு சிறிதுநேரம் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தனர். தினகரம் பிரபு தன் நண்பனான சந்திரசேகரனைப்பார்த்து, 'நண்பா! உன்

தங்கை ஷண்பகவல்லியும் இங்கு வருவாளோ?' என்று கேட்டான். அதற்கு அவன், "ஓஹோ! அந்தக்கேள்வி நானல்லவோ உனக்குக் கேட்கவேண்டும். எனினும் நானே பதில் சொல்கிறேன். அவளுக்கு உடம்பு சிறிது அசௌகரியமாக இருக்கிறது. நீ செய்வதுபோல் நாள் முழுதுமே எங்கள் வீட்டுப் பக்கமே வாராமலிருந்து விடுவது சரியான செயலாகாது என்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்' என்றான். அப்போது தினகரன், 'ஆம்; அதிலும் எனக்கு ஷண்பகவல்லியிடம் அவ்வளவு அன்பு இருக்கும்போது அவ்விடம் வராம லிருப்பது தப்புதான். ஆயினும் புதிய குட்டி ஒன்று அகப்பட்டிருக்கும்போது அதில்தானே மோகம் அதிகமாக இருக்கும்' என்று கூறவும் சந்திரசேகரன், 'நீ உன் புதிய காமக் கிழத்தியாகிய நாடகக்காரி கமலகுமாரியிடம் அதிக மோகங் கொண்டிருப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆயினும் என் தங்கையை நீ மணந்துகொள்வது என்று முடிவு செய்திருப்பதால் நீ அவள் விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். ஆகவே நாளைய தினமாவது நீ தவறாமல் அங்குவந்தால் உன்னுடைய அசிரத்தைக்காக நீ மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம். உன் முகமூடியை ஜாக்கிரதையாக அணிந்துகொள். யாரேனும் உன்னைத் தெரிந்துகொண்டு விட்டால் நீ உன் இஷ்டப்படி வேடிக்கையாக இருக்க முடியாது,' என்றான்,

அதற்கு அவன் தான் தன் இன்பத்தை ஒருகாலும் கெடுத்துக்கொள்ளப் போவதில்லை யென்று தெரிவித்ததும் சந்திரசேகரன் தினகரனுடைய தாயாரும் சகோதரிகளும் அந்த விருந்துக்கு வரப்போகிறார்களா என்று விசாரிக்க அவன், 'எனக்கொன்றும் அவர்களைப்பற்றித் தெரியாது. ஆயினும் என் சகோதரிகள் இருவரும் நவீன உடைகளைத்

தயாரித்துக் கொண்டார்கள். என் தாயார் விஷயம் எனக்கு எதுவும் தெரியாது. அது கிடக்கட்டும். இன்று மாலை நாம் பேசிக்கொண்டிருந்தபோது நீ தெரிவித்த விஷயத்தைப் பூர்த்தியாகச் சொல்லவில்லையே,' என்று கேட்டான். அதற்கு சந்திரசேகரன், 'சில வார்த்தைகளால் அதைக் கூறிமுடித்து விடவாம். ஆனால் இதோ இந்தக் கடிதத்தைப்பார். இது முந்தா நாள் எழுதப்பட்டது' என்று கூறி அக்கடிதத்தை அவனிடம் கொடுத்தான். தினகரனும் தன் முகமூடியை எடுக்காமலே அதிலுள்ள துவாரங்களின் வழியே மின்சார விளக்கின் பிரகாச உதவியால் படித்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட் டிருந்தது. "சந்திரசேகரம் பிரபுவுக்கு! உன்னை மனமார நேசிக்கின்ற, ஆனால் அவளுடைய காதல் எவ்வளவு அதிகமாக இருக்கிறதென்பதை நீ அறியாத மாது உன்னுடன் சாவகாசமாக அன்புடன் பேச விரும்புகிறாள். அதற்கு நற்சமயம் நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டுக் கிரகப்பிரவேச விருந்தேயாகும். உனக்கும் அழைப்பு வந்திருக்குமென்று நினைக்கிறேன். நாம் பரஸ்பரம் ஒருவரை யொருவர் தெரிந்து கொள்வதற்காக முன்னாடியே இன்னின்ன உடையைத்தான் அணிந்து கொண்டு வருவதென்று முடிவு செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. என் மனதில் அவ்வளவு அதிகமான அன்பைப் பதியவைத்த அழகு மிக்க நீ எந்த உடையை அணிய வேண்டுமென்று நான் கூற முன் வந்ததற்காக என்னை மன்னிக்கவும், சந்திரசேகரம் பிரபுவே! அன்று நீ பாஞ்சால தேசத்துக்குதிரை வீரனைப்போல் உடையணிந்து கொண்டு அவனைப் போலவே நடிக்கவேண்டும். மேலும் அப்படிப்பட்ட உடையையே தற்செயலாக வேறு யாரேனும் அணிந்து வந்துவிட்டால் ஆள் மாறாட்டம் ஏற்படாம

விருக்கும் பொருட்டு இதோ இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் வைரப் பொத்தானை உன் தொப்பியில் சொருகிக்கொள்ள வேண்டும். நான் ஒரு பாஞ்சாலதேச ராஜகுமாரியைப் போல் உடைகளையணிந்துகொண்டு வருவேன். இப்படிக்கு பாஞ்சால ராஜகுமாரி சகுந்தலா."

அந்தக் கடிதம் ஒரு பெண்மணியின் கையால் எழுதப்பட்டதாக இருந்தது. தினகரம் பிரபு அக்கடிதத்தைப் படித்து ஆனபிறகு அதைச் சந்திரசேகரனிடம் திருப்பிக் கொடுக்கும்போது தன் முகமூடியின் துவாரத்தின் வழியே அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சந்திரசேகரன் தொப்பியிலிருந்த வைரப்பொத்தானைப் பார்த்தான். அது மிக விலையுயர்ந்ததாகவும் அழகானதாயும் இருந்தால் அக்கடிதம் எழுதியது யாராயினும் அது வேடிக்கைக்காக எழுதப்படாமல் உண்மை நோக்கத்துடனேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று உணர்ந்தான். ஆகவே தன் நண்பனைப் பார்த்து தினகரன், 'நீ ஒரு அதிர்ஷ்டசாலிதான். காதல் லீலையில் ஒரு விசேஷமிருக்கிறது. ஆனால் அந்த மாது யாராயிருக்கலாமென்று உனக்குச் சிறிதும் தெரியாதென்றே நினைக்கிறேன்' என்று கேட்டான். அதற்கு அவன், 'ஆம்; எனக்கொன்றுமே அவளைப்பற்றித் தெரியாது. இக்கடிதத்தால் நீ என்ன தெரிந்துகொள்ள முடிந்ததோ அதைத்தான் நானும் அறிவேன். யாரோ ஒரு ஆள் இக்கடிதத்தை நேற்று கொண்டு வந்து என் வீட்டில் கொடுத்துவிட்டு உடனே போய் விட்டான். அம்மாது உயரமா குட்டையா அல்லது அழகா விகாரமா அல்லது கிழவியா குமரியா ஆகிய ஒன்றுமே எனக்குத் தெரியாது. ஆனால் அவள் அழகுள்ளவளாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்' என்று விடை கூறினான். உடனே தினகரனும், 'நானும் அப்படித்தான் நினைக்

கிறேன். அவள் தக்கபடி அழகுடையவளாக இராவிட்டால் உன்னைப் போன்ற அழகும் இளமையும் வாய்ந்த ஒருவனை வசியப்படுத்த முயன்றிருக்க மாட்டாள்' என்றான். அப்போது சந்திரசேகரன், 'ஆம்; அவள் தான் ஒரு ராஜகுமாரியைப்போல உடை யணிந்து வருவதாகச் சொல்லியதிலிருந்தே அவள் அழகுள்ளவளாயும் கம்பீரத் தோற்றமுடையவளாயும் இருக்கவேண்டுமென்று தெரிகிற தல்லவா? சரி. அது கிடக்கட்டும். ஜனங்கள் அதிகமாக வர ஆரம்பித்து விட்டார்கள். நாமும் கூட்டத்தில் கலந்து கொள்வோம். எனக்குக் கடிதம் எழுதிய அம்மாது வந்துவிட்டால் கூட்டம் கலையும்வரை நான் அவளுடனேயே இருக்க வேண்டியதாக நேருமாதலால் இப்போது நாம் மறுபடியும் நாளை எங்கே, எப்போது சந்திப்பது என்று முடிவு செய்து கொள்ளலாம். நீ கமலகுமாரின் மோகத்தில் மூழ்கி அங்கேயே இருந்து விடுவதென்றும், என்னைப் போன்ற அன்பர்களை மறந்து விடுவதென்றும் தீர்மானித்து விட்டிருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்' என்று கேட்டான்.

அப்போது தினகரன் அதிக வருத்த மடைந்து பேசுபவன்போல், 'சந்திரசேகரம்! நீ அப்படியும் கூறலாமா? நான் உன்னைச் சிறந்த நண்பனாகக் கொண்டிருக்கிறேன் என்பதை நீயே அறிவாய். நாளை மாலை நாம் இருவரும் ராபின்சன் நந்தவனத்தில் சந்தித்து அங்கிருந்து ஓட்டலுக்குச் சென்று சிற்றுண்டி அருந்திவிட்டுப் பிறகு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். அதிருக்கட்டும் நீ நாடக உலகில் பிரசித்தி பெற்ற ராஜலட்சுமியை அடைய முயற்சித்தாயே. அது என்ன ஆயிற்று என்பதை உடனே சொல். அதை யறிவதில் ஆவல் அதிகமாக இருக்கிறது' என்று கேட்க, அவன், 'அன்பா? உண்மையைப் பேசவேண்டு

மாயின் அம்முயற்சியில் ஒரளவு வெற்றிகூட இல்லையென்றே சொல்லவேண்டும். அவள் இருப்பிடம் தெரிந்து கொள்ளவும் என்னால் முடியவில்லை. நாடகசாலையில் அவளைச் சந்திப்பதோ முடியாத காரியம் என்பது உனக்கே தெரியும். ஆனால் அம்முயற்சியை நான் விட்டுவிடவில்லை. இனி அதே வேலையாக இருந்து முயற்சிக்கப் போகிறேன்' என்றான். அதற்குத் தினகரன், 'ஆனால் உனக்கு இப்போது இந்தப் புதிய காதல் விஷயத்தில் அதிக புத்தி சென்றிருக்குமென்று நினைக்கிறேன். இது ஒரு விதமாக முடிந்த பின்னர்தான் வேறு விஷயத்தில் புத்தி செல்லும்,' என்று பரிகாசமாகக் கூறினான். அதற்குச் சந்திரசேகரன், 'இப்போது நான் சந்திக்கப் போகும் மாது எவ்வளவுதான் அழகுள்ளவளாயினும் எனது மனதைக் கொள்ளைகொண்ட ராஜலட்சுமியைப்போல் அவ்வளவு அழகுடையவளாய் இருக்கமாட்டாள் என்று நம்புகிறேன். அப்படியிருந்தாலும் எனக்கு ராஜலட்சுமியிடம் ஏற்பட்டுள்ள மோகம் சிறிதும் குறையாது' என்று சொன்னதும் இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் சிலர் பாஞ்சால தேசத்து குதிரைவீரனைப் போல் உடையணிந்து கொண்டிருந்தார்களென்றாலும் ஒருவராவது சந்திரசேகரனைப்போல் தொப்பியில் வைரப் பொத்தானை சொருகிக் கொண்டிருக்கவில்லை. தினகரனும் சந்திரசேகரனும் ஒன்றாகக் கூட்டத்தில் இருந்தபோது திடீரென்று அக்கூட்டத்தில் பாஞ்சாலதேச ராஜகுமாரியைப்போல் உடையணிந்த மாது அங்கு பிரவேசித்ததைச் சந்திரசேகரன் கண்டதும் தினகரனை விட்டுப் பிரிந்து தனியே ஓரிடத்துக்குச் சென்றான்.

தினகரனும் அம்மாதை உற்றுப்பார்த்தான். அவள்

பாஞ்சால தேசத்து ராஜகுமாரியைப்போல் உடை யணிந் திருந்ததுடன் உயரமானவளாயும் கம்பீரத் தோற்றமுடைய வளாயும், கண்டோர் மனதைக் கவரும் அங்கங்களை யுடைய வளாயும் இருந்தாள். கரிய முகமூடியால் தன் முகத்தை மூடிக்கொண் டிருந்தாள். தனியே சென்ற தினகரம் அம் மாதின் பக்கமாகச் சென்ருனென்ருலும் அவளுடன் பேச அவனுக்குத் தைரியம் வரவில்லை. அதே உடையில் வேறு யாரேனும் வந்துவிட்டிருந்தால் என்ன செய்வது என்று நினைத்தான். ஆனல் அவன் அதிகநேரம் கஷ்டப்படாதபடி அம்மாதே அவன்தான் தனக்குவேண்டியவ னென்பதை அறிந்து அவன் தோள்மீது கையைப்போட்டுத் தனியான இடத்துக்கு அழைத்துச் சென்ருள். தனி இடத்துக்குச் செல்லும்வரையில் அவர்களிருவரும் பேசாமலே மௌன மாகச் சென்ருர்கள். வழியில் சந்திரசேகரன் குழப்பமடைந் தவனாக இருந்தான். அம்மாது யார்? என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் சகோதரியே அவ்வாறு வந்திருந்தா லும் அவனல் கண்டுபிடிக்க முடியாதபடி இருந்தது. எப்படி யிருந்தாலும் அவள் மிக அழகானவளாக இருக்கவேண்டு மென்று நிச்சயித்தான். மேலும் அவள் நடை உடை பாவனை யாலும், முகம் தெரியாவிட்டாலும் கண்களுக்குத் தெரிந்த இதர அங்கங்களினின்றும் அவள் அழகானவளாயும், உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளாயும், காதல் லீலையில் சரச சல் லாப உற்சாக முடையவளாயும் இருக்க வேண்டுமென்றும் நினைத்தான்.

மேலும் அவளது உடையையும் அதன் மதிப்பையும் கவனித்தபோது அவள் உண்மையிலேயே ஒரு ராஜ குமாரி யைப்போல் காணப்பட்டதால் அவளுடன் எப்படிப் பேசு வது என்று தோன்ருமல் அவஸ்தைப்பட்டான். அவள்

உண்மையில் ராஜகுமாரி யல்லவாயினும் ஏதோ ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவளாகவே இருக்கவேண்டுமென்று நினைத்தான். அப்படிப்பட்ட ஒருத்தி தன்னிடம் இவ்வளவு மோகங்கொண்டிருப்பதாகத் தெரிவித்ததால் அதிக சந்தோஷமடைந்தான். ஆனால் பெரிய இடத்து மோகத்தை எவ்வளவு தூரம் மதிப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. இவர்கள் இருவரும் இவ்வாறு தனியே ஒதுங்கியதை அங்கிருந்த கூட்டத்தினர் சிறிதும் கவனிக்கவேயில்லை. ஏனெனின், இம்மாதிரி எவ்வளவோ பேர் அங்குக்கூடி அவரவர்களும் தங்கள் வேலையில் கவனமாய் இருந்தார்கள். முதலில் அம்மாது அக்கூட்டத்தில் புகும்போதுமட்டும் பலரும் அவளைப் பார்த்தார்கள் என்பது உண்மையே. ஆயினும் பின்னர் அவளைப் பற்றி யாரும் கவனிக்கவில்லை. அவர்களிருவரும் மிக அவசரமாகப் போக விரும்பியவர்கள்போலச் செல்லவில்லை. ஏதோ வேடிக்கையாகப் பேசிக்கொண்டே ஒரு மூலைக்குச் சென்றவர்கள் போலப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஒரு தனியான இடத்துக்குச் சென்ற பின்னர் இருவரும் தனியே ஒவ்வொரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டனர். அப்போது சந்திரசேகரன் பயபக்தி விசுவாசத்துடன் பேசுவதுபோல், 'அழகான மாதே, அல்ல, அல்ல, ராஜகுமாரியே! எனக்கு ஆனந்தத்தைத் தரப்போவதும், சதா காலமும் உன்னைப் புகழ்பவனாக என்னை ஆக்கப் போகிறதுமான அந்த முகத்தைப் பார்க்க என்னை அனுமதிக்க முடியுமா? என்று கேட்டான். அதற்கு அம்மாது ஒருவிதமான திருட்டுக் குரலுடனும் மெதுவாகவும், 'சந்திரசேகரம் பிரபுவே! இந்தக் காதல் விஷயத்தில் நீ ஆச்சர்யப் படக்கூடிய வகையிலெல்லாம் இன்பத்தை யனுபவிக்கப் போகிறாய் என்பது திண்ணம். ஆனால் என் இன்பம் உனக்குக்

கிடைப்பதற்குமுன் நீ காரணங் கேட்காமலுங்கூட சில கண்டிப்பான கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். எனக்குச் சொற்ப சேவை செய்வதனுல்மட்டுமே நீ என்னைப் பெற முடியும்' என்றாள். அப்போது அவன், 'ஆஹா! இந்த விஷயம் இப்போதே ருசிகாமானதாகத் தோன்றுகிறது. நான் பாஞ்சால தேச ராஜகுமாரியாகிய உன் காலடியில் பணிந்து, உன் கட்டளையின்படி மனமார உனக்குச் சேவை செய்யக் காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்றான்.

அச்சமயம் அவனுக்கு இன்னவளென்று விளங்காத அம்மாது, 'ஐயா குதிரை வீரரே! அவ்வளவு அவசரப்பட்டு வாக்குறுதியளித்துவிட வேண்டாம். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்பதுபோல் பின்னுல் வருந்த நேரிடும். ஆதலால் நன்றாக யோசனை செய்து பிறகு முடிவைக் கூறு,' என்றதும் சந்திரசேகரன், 'ஓ, ராஜகுமாரியே! நீ கூறுவதைப் பார்த்தால் எனக்கு நீ இடப் போகும் கட்டளை ஏதோ பிரமாதமானதாக இருக்கும்போலிருக்கிறது. எப்படிப் பட்டதாயினும் செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று கூறிக்கொண்டே அம்மாதின் அழகிய கரத்தைத் தன் கரத்தால் பிடித்துக்கொண்டான். அவனிடம் காதல் கொண்ட விஷயத்தில் தானும் சிறிதும் பின்வாங்கியவளல்ல என்பதற்கு அறிகுறியாக அவளும் அவன் கையை அன்புடன் அழுத்தி, 'இதோ அழுத்துகிறேனே இதுதான் என் காதலுக்கு அடையாளமாகும். ஆனல் இப்போது நான் என் முகமூடியையும் அப்புறப்படுத்தமாட்டேன். அல்லது நான் யார் என்பதையும் இப்போது சொல்ல முடியாது. அல்லது என் பெயர் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கான சிறு உளவையும் தாமாட்டேன். ஆனல் நான்

உயர்ந்த அந்தஸ்தி லிருப்பவள் என்பதைமட்டும் உறுதி கூறு கிறேன்' என்று சொல்லி முடிப்பதற்குள் சந்திரசேகரன் அதிக ஏமாற்றமும் வருத்தமும் அடைந்தவன்போல், 'ஐயோ! நான் மிக அழகாக இருக்குமென்று நினைக்கிற அந்த முகத் தைப் பார்க்க முடியாதா?' என்று பரிவுடன் கேட்டான்.

அதற்கு அம்மாது 'இல்லை, இந்த இரவு பார்க்கமுடியாது. ஆனால் இந்த முகம் மிக அழகான தென்பதிலும், இந்தக் கூட் டத்தில் வந்திருக்கிற எல்லா மாதர்களையும்விட அழகானவள் நான் என்பதிலும் சிறிதும் சந்தேகமே யில்லை. மேலும் குதிரை வீர! நான் உன்னை மனமாரக் காதலிக்கிறேன் என்பதும் உண்மை. என் அன்பையும் பணத்தையும் உனக்கு அர்ப் பணம் செய்யவேண்டுமாயின், அதற்கேற்ற வாக்குறுதியை நீயும் அளிக்கத்தான்வேண்டும். என் அன்பை நீ அந்த முறையில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாயா? என் அன்பும் செல்வமும் உனக்கு வேண்டுமா? அவையெல்லாம் வேண்டுமென்றால் காரணங் கேட்காமலும் உடனே பணியும் வேலைக்காரனைப்போல் எனக்குச் சேவை செய்வதாக நீ ஒப்புக்கொள்ளவேண்டும். நிதானமாக யோசித்துப் பதில் சொல். அவசரப்பட வேண்டாம்' என்று கூறினாள்.

அதற்குச் சந்திரசேகரம், 'நிச்சயமாகவே சொல்கிறேன். உன் இஷ்டப்படி நடக்கக் காத்திருக்கிறேன். ஆனால் நீ இடப்போகும் கட்டளைதான் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை' என்றான். அதற்கு அம்மாது 'நானாக எந்த விஷயத்தையும் உனக்கு வெளிப்படுத்துவதற்கு முன்னர் நீ அதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணமே கொள்ளாமல் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்ய வேண்டும். இதற்காகத்தான் நான் ராஜகுமாரிபோலவும் நீ

குதிரை வீரனைப்போலவும் வேஷமணிந்தது. இவ்வாறு என் இஷ்டப்படி நடக்க உனக்கு என் அன்பினிடமும் அழகினிடமும் பூரண நம்பிக்கை இருக்கிறதா?' என்று கேட்கவும் அவன், 'கட்டாயம் இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே அவளது காத்தைத் தன் இரு காத்தாலும் அழுத்தியபோதே அவனது தேகம் முழுதும் மின்சார சக்தியால் தாக்கியதுபோல் உணர்ச்சி பெற்றது. அப்போது அம் மாது, 'நீ இவ்வாறு என் கட்டளைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டதற்காக நான் உனக்கு இப்போது வந்தனம் செலுத்துவதில் பயனில்லை. நான் முன்னமே உனக்காகச் சமர்ப்பித்துவிட்ட என் அன்புக்காகவே நீ இவ்வேலைகளைச் செய்யப்போகிறாய். நான் பல காலமாகவே உன்னை நேசித்து வருகிறேன். நான் இரகசியமாக என் உள்ளத்தில் கொண்டுள்ள இக்காதலை உன்னிடம் வெளிப்படுத்திவிட வேண்டுமென்றும் நினைத்ததுண்டு. ஆனால் அவ்வாறு செய்யத் தைரியம் வரவில்லை. இவ்வாறு சொல்வதாலேயே நான் ஏதோ கெட்டுப்போன பல பெண்களில் ஒருத்தி என்று நினைத்து விடவேண்டாம். இதுவரை என் பெயருக்குப் பங்கம் வாரமல் பார்த்துக்கொண்டு சமூகத்தில் மிக்க பெருமையுடனேயே இருக்கிறேன். நான் கௌரவமான அந்தஸ்தில் இருப்பவள்' என்று கூறினாள்.

அப்போது சந்திரசேகரம் பிரபு, 'ராஜகுமாரியே! உன்னுடைய குதிரை வீரனாகிய எனக்கு நீ இடப்போகும் கட்டளையை விரைவில் தெரிவித்து விடு. நான் சிறிதும் தாமதமின்றி அக்கட்டளையைச் சிரமேற் றாங்கி உன் இஷ்டப்படி செய்யக் காத்திருக்கிறேன். வேலையின் சுபாவம் இன்னதென்று தெரியவேண்டும். நான் எப்படியாவது உன் கட்டளையை விரைவில் நிறைவேற்றி வைத்துவிட்டு நான் ஆவ

ஆடன் எதிர்பார்க்கும் உன் இன்பத்தை அனுபவிக்க ஓடி வருவேன்,' என்றான். அதற்கு அம்மாது, 'நான் இடும் வேலையைச் செய்வதற்குக் கொடூரமான மனமும் தோள்வலிமையும் வேண்டும் என்று முன்னமே குறிப்பிட்டேனல்லவா' என்றாள். அதற்கு அவன், 'இப்படிப் பேசுவதில் பயனில்லை. உன் மனதிலுள்ள விஷயத்தை விளக்கிவிடு' என்றதும் அவள், 'நான் பாஞ்சால ராஜகுமாரி என்றும் நீ குதிரை வீரன் என்றுமே வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு ராஜகுமாரியின் அன்பை ஒரு வீரன் கவர வேண்டுமென்றால் அவன் ஏதேனும் வீரத்தனமான வேலையைச் செய்யவேண்டு மென்பது வழக்கமாக இருக்கிறது. அதுபோல நீயும் என் அன்பைப் பெற ஒரு வீரச் செயல் ஆற்றவேண்டும். எனக்கு ஒரு விரோதி இருக்கிறான். அவனை எப்படியாவது தொலைத்துப் போடவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன். அவன் எனக்கு விரோதியாக என்ன செய்தான் என்பதுபோன்ற விஷயங்கள் இப்போது உனக்குத் தெரியப்படுத்த முடியாது. அவன் என் பகைவன். அவனை யார் கொல்கிறார்களோ அவர்களுக்குத்தான் என் அன்பை, காதலை அர்ப்பணம் செய்வேன்,' என்று ஆத்திரத்துடனும் பரபரப்புடனும் கூறி முடித்தாள்.

மேற்கூறியவாறு அம்மாது சொல்லிவிட்டுச் சிறிது நேரம் மௌனத்துடன் இருந்தாள். அப்போது சந்திரசேகரம் பிரபு ஒன்றும் பேசவில்லை. என்ன சொல்வதென்றே அவனுக்குத் தோன்றவில்லை. அவளுடைய வார்த்தையை அவன் கடுமையானதாக நினைக்கவில்லையென்றாலும் அவள் மட்டும் கடுமையான தோரணையில்தான் கூறினாள். ஆகவே அவன் பேசாமல் சும்மா இருந்தான். ஆனால் அவன் தன் முகமூடியின் துவாரத்தின் வழியே அம்மாதின் முகமூடியின்

துவாரத்தின்மூலம் அவளது கண்களைக் கூர்ந்து நோக்கினான். அப்படி அவன் பார்த்தது அவள் மனதிலுள்ள மர்மத்தை அக்கண்ணின்மூலம் தோண்டி யெடுப்பதுபோல் இருந்தது. ஆகவே அவள், 'ஓஹோ! நீ இதைக் கடுமையானதாக நினைக்க வில்லை போலும்! ஏதோ நடனவேளையில் உல்லாசமாகப் பேசுவதற்காகச் சொல்லப்பட்ட வார்த்தை யென்று நினைக் கிறாய்போலத் தெரிகிறது. உண்மையில் இது அப்படியல்ல. உண்மையைச் சொல்லுகிறேன் கேள். நான் உன்னை மன மார நேசிக்கிறேன். உனக்கு நான் இன்பத்தை யளிப்பதற்கு முன்பாக நீ அதைப் பெறுவதற்கு யோக்கியதை யுடையவன் என்பதை நிரூபிப்பதற்காக என் மனம் குளிரும்படியும், உன் வீரத்தனத்துக்கு அடையாளமாகவும் என் எதிரியைக் கொல்லவேண்டும். கொல்லவேண்டும் என்று சொன்னதனு லேயே பேடிகள்போல் மறைவில் நின்று அவனைக் கொல்ல வேண்டு மென்பதில்லை. இன்னும் பல வழிகள் இருக்கின் றன. எதற்கும் ஒன்று நிச்சயமாகத் தெரிந்துகொள். எனக்கு ஒருவன் அவமானப்படுத்திவிட்டான். அவனை நீ தண்டிக்க வேண்டும்' என்று மீண்டும் விவரித்துக் கூறினாள்.

அதற்கு சந்திரசேகரன், 'நீ உண்மையில் எனக்கு விவ ரத்தைத் தெரிவித்துக் கட்டளையிட்டால் என் கையால் அவ னைத் தண்டித்து விடுகிறேன்,' என்றதும் அம்மாது, 'சரி! அதுதான் எனக்கு வேண்டும். நான் தெரிவிக்கப்போகிற ஆளை நீ எங்கேயாவது கண்டுபிடி. அவனுடன் ஏதாவது அநாவசியமாகச் சண்டைபோட்டு அவனுக்குக் கோபம் பொங்கும்படி செய்' என்று அவள் சொல்லி வரும்போது அவன் குறுக்கிட்டு, 'ஓ! நீ கடுமையாகக் கூறவில்லைபோ லிருக்கிறதே; நான் சண்டை பிடித்துப் பிறகு அவனைக் கொல்வதெப்படி?' என்றான். அதற்கு அவள், 'அப்போது

தான் பரஸ்பர துப்பாக்கி யுத்தம் நடைபெற ஹேது ஏற்படும். அந்தமாதிரி யுத்தத்தில்தான் நீ அவனை சுட்டுத் தள்ளவேண்டும்' என்றாள். அதற்கு அவன், 'எனக்கு நேர்முகமாக எப்படிப்பட்ட தீங்கையும் செய்யாத ஒருவன்மீது எப்படி எனக்குத் துவேஷம் பெருக முடியும்?' என்று கேட்கவும் அம்மாது, 'இவ்வளவுதானா? அப்படியானால் நம்முடைய சம்பாஷணை இத்துடன் முடிவடையட்டும். இப்படிப்பட்ட ஒருவனை நான் நேசித்தது பெரிய தவறேயாகும். நான் சந்திரசேகரம் பிரபு என்றால் ஏதோ பிரமாதமாக நினைத்து ஏமாற்றமடைந்துவிட்டேன். அதற்காக நான் இப்போது மிகவும் வருந்துகிறேன்,' என்று சொல்லிக்கொண்டே சுளித்த முகத்துடன் உட்கார்ந்திருந்த ஆசனத்தினின்றும் எழுந்தாள்.

ஆயினும் சந்திரசேகரம் அதிக ஆவலுடன், 'நில். ஒரு நிமிஷம் இரு. நாம் இருவரும் இந்த நிலைமையில் பிரிவது கூடாது. ஏதோ தவறுதலாகச் சொல்லிவிட்டேனேயொழிய இப்படிப்பட்ட பயங்கொள்ளித்தனம் என் போன்றார்க்கு அதிலும் ரத்தினபுரி நகர வாசிகளுக்கு ஏற்றதாகாது' என்று சமாதானம் கூறினான். அதற்கு அவள், 'நீ தானே இப்படி நடந்துகொண்டாய். உண்மையிலேயே தன்னை நேசிக்கும் ஒரு பெண்ணை ஒருவன் அடைய விரும்பினால் அவளைப் பெற்றுப் பாதுகாத்துக்கொள்வதற்குரிய சக்தி அவனுக்கு இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக அவன் ஏதேனும் வீரச் செயலைச் செய்து காட்டவேண்டுமென்பது எல்லாத் தேசத்திலும் எல்லாக் காலத்திலும் ஏற்பட்ட நியதியாகும். இப்போது உன் சம்பந்தப்பட்டவரையில் உனக்குக் கிடைக்கப் போகிற மாதோ அழகிற் சிறந்தவள். அதுமட்டுமா? நீ ஏழையாக இருக்கிறாய். அம்மாது உனக்குவேண்டிய செல்வத்தை அளிக்க முடியும். அந்த செல்வத்தையும்

அவளுடைய கூட்டுறவு இன்பத்தையும் நீ விரும்பினால் அவளுடைய விரோதியை மல் யுத்தத்தில் கொன்று வெற்றிமாலை சூடி வரவேண்டும். அதனால் நீயும் அவளுடைய தயை தாட்சண்யத்தை எதிர்பாராமல் அவள் இன்பத்தையும் செல்வத்தையும் கேட்க உரிமை உண்டாகிறது' என்று வற்புறுத்திக் கூறினாள். உடனே அவன், ஆம். நீ கூறியதெல்லாம் வாஸ்தவந்தான். நான் எப்படியாவது உன் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நீ அந்த உன்விரோதியின் பெயரைச் சொல்' என்று கேட்டுக் கொண்டே அவளது கரத்தைப் பிடித்து உயர்த்தித் தன் உதட்டில் வைத்து அழுத்தினான்.

அதற்கு அம்மாது, 'இல்லை, இல்லை; இப்போது கூற முடியாது. இவ்விஷயத்தைப்பற்றி நீ இன்னும் சில மணி நேரம்வரையாவது யோசிக்கவேண்டும். நாளை காலை சுமார் ஒன்பது மணிக்கு உனக்கு ஒரு கடிதத்தின் மூலம் அந்த என் விரோதியினுடைய பெயர் அறிவிக்கப்படும். இந்த விஷயத்தையெல்லாம் நீ இந்த உலகில் ஒரு பிராணிக்குக் கூடச் சொல்லமாட்டேனென்று சத்தியம் செய்துகொடுக்கவேண்டும். மேலும் நானாக உன்னிடம் என்னைப்பற்றிய உண்மையான தகவல்களைத் தெரிவிப்பதற்குமுன் நீயாக அதைத் தெரிந்து கொள்ளவும் முயற்சிக்கலாகாது. எனக்குத் துரோகமாக நீ ஏதேனும் செய்தால் அது எனக்கு உடனே தெரிந்துவிடும். அப்போது நான் உன்னை நேசிப்பதற்குப் பதிலாக என் விரோதியாகக்கொண்டு உன்னைப் பழிவாங்கவும் ஏற்பாடு செய்வேன் என்பது திண்ணம். அவ்வாறின்றி நீ எனக்கு உண்மையானவனாக இருந்து என் இரகசியத்தை வெளிவிடாம லிருப்பதுடன் நான் இடும் கட்டளையையும் ஒழுங்காக நிறைவேற்றி வைத்தால் நீ எதைக் கேட்டாலும் நான் இல்லை யென்று சொல்லாமல் உனக்குக் கொடுப்பேன்,'

என்று சொன்னதும் ஆசனத்தைவிட்டு எழுந்தாள். இன்னும் சிறிது நேரம் இருந்து எல்லா விஷயத்தையும் சொல்லி விடும்படி அவன் கேட்டிருப்பான். ஆனால் அவள் அவனது கையைப் பிடித்துக்கொண்டு, 'இன்று இவ்வளவு பேசியது போதும். நாமும் கூட்டத்தில் கலந்துகொள்வோம். போகலாம் வா' என்று கூறினாள்.

பின்னர் அவர்கள் இருவரும் அத்தனி இடத்தைவிட்டுக்கூட்டத்துக்குள் நுழைய வந்தனர். அப்போது வழியில் அம்மாது திடீரென்று, 'சந்திரசேகரம்! இப்போது நாம் பிரிந்து விடுவோம். உன் உறுதிமொழி ஞாபக மிருக்கட்டும். நான் உன்னை நேசிக்கிறேன் என்பதும் ஞாபகத்திலிருக்கட்டும்' என்று சொல்லிவிட்டு அவனைவிட்டுக் கூட்டத்தில் எங்கேயோ போய்விட்டாள். அவள் அவனை எந்த இடத்தில் விட்டுவிட்டுப் போனாளோ அதே இடத்தில் அவன் இரண்டு மூன்று நிமிஷம்வரை திக்பிரமை யுடையவன்போல் நின்றுகொண்டு உடல்மட்டும் அங்கும் மனம் எங்கேயோ யுடையவனாய் நின்றிருந்தான். அவனுடைய அன்பன் தினகரம் பிரபு திடீரென்று அவனது கையைப் பிடித்ததால் அவன் தூக்கத்திலிருந்து விழித்தவன்போல் உணர்ச்சியடைந்தான். உடனே தினகரன் சந்திரசேகரனைப் பார்த்து, 'எனதன்புள்ள நண்பா! அந்தப் புதிய மாது உன்னுடன் எப்படி நடந்துகொண்டாள்? என்ன விசேஷம்? உங்கள் காதல் விஷயம் எவ்வளவுதூரம் முடிந்திருக்கிறது?' என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு சந்திரசேகரம் சிறிது கோபத்துடன் பேசுவதுபோல், 'எனதன்புள்ள சிநேகிதனே! நான் சிறிது பொறுமையை இழந்து பேசினாலும் நீ மன்னிக்க வேண்டும். ஏனெனின், எனக்கும் அம்மாதுக்குமிடையில்

என்னென்ன நடந்ததோ அதையெல்லாம் நான் இப்போது நினைத்துக்கொண் டிருக்கிறேன்' என்ருன்.

அதற்குத் தினகரன், 'ஓ, அப்படியாளுல் உண்மையி லேயே ஏதோ காதல் விஷயம்தான் உங்களிடையே நடை பெற்றிருக்கிறது. அதையெல்லாம் நீ என்னிடம் விவரமாகக் கூறுவாய் என்று நம்புகிறேன். மேலும் நம் இருவருக்குள் ஒருவரை யொருவர் அறியாத இரகசியம் ஒன்றும் இல்லை யல்லவா?' என்று கேட்டதும் சந்திரசேகரன், 'ஆம்; நமக் குள் இரகசியம் ஒன்றுமில்லையென்பது வாஸ்தவமே, ஆனல் இப்போது அதைப்பற்றி ஒன்றும் அதிகமாகச் சொல்லமுடி யாததற்காக வருந்துகிறேன். நீ இக்கூட்டத்தில் சந்தோஷ மாகக் காலத்தைக் கழித்தாயா? அதைச்சொல்' என்று விசா ரித்தான். அதற்கு அவன், 'ஆம்; சந்தோஷமாகவும் வேடிக்கையாகவும்தான் காலங்கழித்தேன். நான் சில பெண்களுடன் நடனமாடினேன். நான் யாரென்று தெரிந்து கொள்ள அவர்கள் பெரிதும் முயற்சித்தனர். ஆனல் முடிய வில்லை. என் இரு சகோதரிகளும் வந்திருக்கிருர்கள். அவர் கள் நவாப் தர்பார் காலத்தில் அரண்மனை தோழிமார் அணிந்துகொண் டிருந்ததுபோன்ற வேடத்தை யணிந்திருக் கின்றனர். ஆனல் என் தாயார் இங்கு வரவில்லை. அவள் வீட்டிலேயே ஒரு அறையில் சுகவீனமாகப் படுத்திருப்பதாக என் சகோதரிகள் கூறினர். ஆதலால் அவள் இன்று இங்கு வரமாட்டாள். நாம் இங்கு நின்றுகொண்டு பலரும் நாம் யாரென்று தெரிந்துகொள்ள முயற்சிக்கும்படி செய்வதை விட அதோ அந்த சிற்றுண்டி யறைக்குச் சென்று ஏதேனும் உணவு கொள்ளலாம்' என்ருன்.

தன் நண்பன் தினகரம் பிரபு, அதிகம் கேட்காமல் அத் துடன் விட்டுவிட்டதைப்பற்றிச் சந்தோஷமடைந்த சந்திர

சேகரன், 'சரி; அப்படியே சிற்றுண்டி யறைக்குச் செல்வோம்' என்று ஒப்புக்கொண்டான். பிறகு நாகலாபுரம் ஜமீன்தாரின் அம்மாளிகையில்கூடிய அனைவரும் எவ்வாறு தங்கள் காலத்தை எவ்வித இன்பத்துறைகளில் கழித்தார்கள் என்பதுபற்றி நாம் அதிகமாக இவ்விடம் விவரிக்க வேண்டியதில்லை. விடியற்காலம் சுமார் நான்குமணிவரை நடனம் நடந்தது. ஆனால் சந்திரசேகரம் பிரபு கடைசிவரையில் இருக்கவில்லை. தான் உடனே வீட்டுக்குச் சென்று தனக்கும் அம்மாதுக்கு மிடையில் நடந்த விஷயங்களைப்பற்றி யெல்லாம் சிந்திக்க வேண்டுமென்று நினைத்ததால் அவன் தனக்கு உடம்பு சரியில்லை யென்று தினகரம் பிரபுவினிடம் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். அவன் தன் வீட்டுக்குப்போய்ப் படுக்கையில் படுத்தானென்றாலும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. நாகலாபுரம் ஜமீன்தார் மாளிகையில்கண்ட அப்பெண்மணியின் ஞாபகமே அதிகமாயிருந்தது. அவள் யார் என்று தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆவல் மிகுதியாக இருந்தது. அவன் அன்று இரவின் மீதிப்பாகம் முழுதும் அம்மாதைக் கண்டதுபோலவும், அவளுடன் பேசியதுபோலவும் கனவு கண்டுகொண்டிருந்தான்.

அவன் மறுநாள் காலை சீக்கிரத்திலேயே எழுந்து தன் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு அம்மாது தெரிவித்தபடி அவளுடைய ஆள் கடிதம்கொண்டு வருவானா என்று மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். சுமார் ஒன்பதரை மணிக்கு அவனுடைய சேவகன் ஆறுமுகம் ஒரு கடிதத்தை மாடியின்மீது கொண்டுவந்தான். அக்கடிதத்தின் மேல்விலாசமும் முன்பு எழுதப்பட்டது போன்ற பெண்மணியின் எழுத்தாகவே இருந்தது. அக்

கடிதத்தைப் பிரித்ததும் முதலில் அவன் கண்டு ஆச்சர்யப் பட்டது என்னவென்றால் அதில் ஆயிரம் பவுன் பெறுமான நோட் ஒன்று வைக்கப்பட் டிருந்தது. இரண்டாவது இன் னும் அதிகமாக ஆச்சர்யமடைந்ததற்குக் காரண மென்ன வென்றால் அக்கடிதத்தில் ஒருவரது பெயர் ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் எழுதப்படவில்லை. அந்த மாதின் பரம விரோதி என்று சொல்லப்பட்டவனும், தன்னால் கொல்லப் படவேண்டியவனுமாகிய அந்த ஆசாமியின் பெயரை அதில் கண்டதும் சந்திரசேகரன் 'ஆ!' என்று பிரமித்தான். பிறகு அவன் மறுபடியும் சிறிதுநேரம் திக்பிரமையுடன் ஆழ்ந்த சிந் தனையில் மூழ்கினான்.

ஒரு விருந்து என்றால் அவரவர்களும் தங்கள் காரியத் தைச் சாதித்துக்கொள்ளப் பயன் படுவதாக மாறி யிருப்ப தைக் கண்டால் இக்கால மக்களின் சுயநலத்தையும் அறி யாமையையுமே காண்பிக்கின்றது. சாதாரணமாகச் சுபாசுப காரியங்களில் விருந்துகள் நிகழ்வதுண்டு. அதுவும் எல்லா பந்து மித்திரர்களும் அப்படிப்பட்ட குறிப்பிட்ட காலத்தி லேனும் ஒன்றாக இருந்து சமத்துவமான உணவருந்தட்டும் என்பதற்காகவே, அத்தகைய விருந்துகள் ஏற்பட்டன. ஆனால் இக்காலத்தில் ஒரு செல்வருக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமென்றால், அல்லது ஒருவரால் ஒரு காரியம் முடிந் தது என்றால் அதற்காக வெல்லாம் விருந்து வைத்துவிடுகின் றனர். விருந்துக்குச் சென்றவர்கள் அக்காரியத்துக்குக் கட்டுப்பட்டு விடுகின்றனர். இவைகளெல்லாம் காலத்தின் போக்கே.

அன்பர்காள்! இரத்தினபுரி இரகசியத்தின் ஏழாம் பாகத்தை இதற்குமுன் ஆறுபாகம்வரை சம்பந்தப்படாத

இப்புதிய கதையின் இந்த 38-வது அத்தியாயத்துடன் முடித்துக்கொள்கிறோம். இக்கதையின் தொடர்ச்சி எட்டு ஒன்பதாம் பாகங்களில் முடிவடையும். ஏழாம் பாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய கதையை இதுவரை வாசித்து இன்பமடைந்த பல நண்பர்களும் இக்கதை முடியும்வரை நமது 'மனமோகினி'யின் சந்தாதாரர்களாக இருந்து முழுதும் படித்து ஆனந்தப்பட வேண்டுமென்றும், தங்களைப் போலவே தங்கள் நண்பர்களும் ஆனந்தப்படுவதற்காக அவரவர்களும் தங்கள் நண்பர்களுக்குச் சிபார்சு செய்து இந்த ஏழாம் பாகத்தை புஸ்தக ரூபமாக வாங்கும்படியும் மீதி பாகங்களுக்கு 'மனமோகினி' சந்தாதாராகச் சேரும்படியும் ஏற்பாடு செய்வீர்களென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

ஓம் தத் சத்.

இரத்தினபுரி இரகசியம் 7-ம் பாகம்
முற்றிற்று.

186573

PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS, MADRAS.

மதனாம்பாள் அல்லது மகா மாயக்களவு.

இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப் பெற்ற மிக்க அற்புதம் பொருந்திய நாவல்களில் முதன்மை பெற்ற தாகும். இதில் முதலியாரவர்களின் முழு ஆற்றலையும் நன்குணரலாம். இந்நாவல் படிப்போர் மனதைக் கவர்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செய்யுமென்பதில் ஐயமில்லை.

இரண்டு பாகமும் விலை ரூபா 3—0—0.

சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி.

இந்நாவல் கொள்ளை, கொலை பாதகங்களுக்கு அஞ்சாத கொடும் பாவிகளான ஒரு பெரும் கூட்டத்தாரின் தலைவனான சுப்பையாபிள்ளை சந்திராபாய் என்னும் பெண்ணை அவள் செல்வத்திற்காசைபட்டுக் கல்யாணம் செய்துகொள்ள முயன்று முடியாமற் போகவே அவளுக்குப் பல இடுக்கண் விளைவிப்பதும் அச்சமயங்களி லெல்லாம் துப்பறியும் வீரசிங்கமாகிய சங்கரதாஸ் அவளைக் காப்பாற்றிக் கடைசியில் சுப்பையா பிள்ளையைப் பல பெருங்குற்றங்களுக்காகப் பிராணதண்டனை யடையச் செய்வது நல்லபுத்திமதியைப் புகட்டும்.

இதன் விலை ரூபா 2—0—0.

இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும்பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியா யிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனதைக் கவரக்கூடியனவாயும் இருக்கும். விலை ரூ. 2.

இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்.

இஃதொரு அதியற்புதமான நவீனம்; படிப்பவர்க்கும், கேட்பவர்கட்கும் மிக்க மன உற்சாகத்தையும், பெரு மகிழ்வையும் கொடுப்பதுடன் அறிவின் அபிவிருத்தியையும், நல்வழியில் நடக்கும் போராற்றலையும் உண்டாக்குவதில் இதற்கிணையானது இராதென்பதை இதை யூன்றி வாசிப்பவர் நன்குணரலாம். ரூ. 1—12—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்த
ஆங்கில பாஷா போதினி.

இது 700-பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது.

அழகிற்சிறந்த 16-ஆப்டோன் படங்கள் உள்ளது. விலை ரூபா 2–0–0

இது இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்க அரிய நூல். இதுவரை வெளி வராத நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கிலபாஷையில் தேர்ச்சி யடைந்து நன்றாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்து கொள்ளலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு ரூபா 2–0–0

வேதசார சமுத்தரணம்.

வேத உபநிஷத்துக்களாலும், யோகசாதனஞ் செய்து முத்தி யடைந்த முனிபுங்கவர்களாலும், பகவத்கீதை, கைவல்யம், ஞான வாசிட்டம் முதலிய அரிய பெரிய நூல்களாலும் விரித்துக் கூறப் படும் வேதாந்த இரகசியங்களெல்லாம் இதில் சாமனியரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் விதமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும், கூறப்பட் டிருக்கின்றன. ஜீவாத்மாவின் தன்மை, பரமாத்மாவின் தன்மை, மனம் முதலிய அந்தக்கரணங்களின் இயற்கைகள், ஜீவாத்மா, அந்தக்கரணங்களோடும், தேகத்தோடும் சம்பந்தப்பட் டிருக்கும் விதம், நீங்கும் விதம், மனவோட்டத்தைத் தடுக்கும் மார்க்கங்கள், யோகசாதனம் செய்யும் விதம், ஜீவனும் பிர்மமும் ஐக்கியமாகும் விதம் முதலிய வேதாந்த அந்தரங்கப் பொருள்களெல்லாம் சந்தேகமின்றி வெகு தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

186573

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
6-பாகமும் ...	11	10	தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, நாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.